பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 11 புதன்கிழமை (27.08.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 274

# திருமலை கடற்படைத் தளம் மீது புலிகள் விமானத் தாக்குதல்!

## இரண்டு குண்டுகளை வீசிவிட்டு சேதமின்றி திரும்பின; நேற்று முன்னிரவு அதிரடியில் கடற்படையினர் காயம்

திருகோணமலை, ஒகஸ்ட் 27

திருகோணமலைக் கடற்படைத் தளம் மீது நேற்று முன்னிரவு விடுதலைப்புலிகளின் இலகு ரக விமானங்கள் இரண்டு அதிரடியாக குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தின.

இரவு 9 மணிக்கும் 9.15மணிக்கும் இடையில் வீரியம் மிக்க இரண்டு குண்டுகளை (Improvised Bombs) வீசிவிட்டு அவை எவ்வித சேதமும் இன்றித் திரும்பி விட்டன. புலிகளின் அதிரடித் தாக்குதலில் கடற்படையினர் காயமடைந்தனர்.

விடுதலைப்புலிகளின் விமானப்படை இலங்கை கடற்படைத் தளம் மீது தாக்குதல் நடத்தியதை அரச படைத் தரப்பு ஒப்புக்கொண்டது.

யாழ்ப்பாணத்துக்குப் படையினரை ஏற்றிச்செல்ல பயன்படுத்தப்படும் 'ஜெற் லைனர்' என்ற துருப்புக்காவிக் கப்பலை இலக்குவைத்தே புலிகள் விமானத்தாக்குதல் நடத்தியதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப்புலிகள் நடத்திய ஐந்தாவது விமானத்தாக்குதல் இதுவாகும். ஆகக் கடைசியாக கடந்த வருடம் ஏப்ரல் மாதம் சபுகஸ்கந்த எண்ணை சுத்திகரிப்பு நிலையம் மீது விடுதலைப்புலிகள் விமானத்தாக்குதலை நடத்தியிருந்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## துணுக்காய் மோதலில் ஐந்து படையினர் பலி

கொழும்பு, ஒக 27

துணுக்காய் பகுதியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற மோதல்களில் ஐந்து படையினர் கொல்லப்பட்டனர்; நான்கு படையினர் காயமடைந்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுத் தேர்தலுக்கு இப்போது அவசரம் இல்லை; அது வீண் செலவு என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஒகஸ்ட் 27

"2010 ஆம் ஆண்டு வரை அரசுக்கு மக்கள் ஆணை இருக்கின்ற நிலையில் பொதுத்தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு இப்போது என்ன அவசரம்? இப்படிக் கேள்வி எழுப்பியிருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

நேற்று செவ்வாய்க்கிழமைஅலரி மாளிகையில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போதே ஜனாதிபதி இந்தக் கருத்தைத்தெரிவித்தார் என்று அறியவந்தது.

வடமேல் மாகாணசபைத் தேர்தலில் கிடைத்த வெற்றியைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தைக் கலைந்துவிட்டு பொதுத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி அவலத்தை ஐ.நா.கவனிக்கக் கோரி கிளிநொச்சி நகரில் நேற்று மக்கள் பேரணி

கொழும்பு, ஒக 27

வன்னி மக்கள் மீது அரசு கட்டவிழ்த்து விட்டுள்ள மனிதப் பேரவலத்தை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு வரும் நேர்க்குடன் மக்கள் பேரணி ஒன்று நேற்று (செவ்வாய்க்கிழமை) கிளிநொச்சியில் நடைபெற்றது.

நீதிக்கும்சமாதானத்துக்குமான ஆணைக் குழுவின் வன்னி அமைப்பு, நடத்திய இப் பேரணி, கிளிநொச்சி புனித தெரேசாள் ஆலயத்தின் நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழுவின் தலைவர் அருட்திரு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழுவின் பிரமுகர்கள் தமிழ்க் கைதிகளைச் சந்தித்தனர்

கொழும்பு,ஒக.27

தலைநகரிலும்,சுற்றாடலிலும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு வெலிக்கடை மற்றும் நியூமகஸின் சிறைச்சாலைகளில் நூற்றுக்கணக்கில் தடுத்து வைக்கப் பட்டிருக்கும் தமிழ்க் கைதிகளை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் (கருணா குழுவின்) பிரமுகர்கள் நேற்று நேரில் சென்று சந்தித்தனர்.

கிழக்கு மாகாண சபையின் விவசாய, கால்நடை, மீன்பிடி,சிறுகைத்தொழில் அமைச்சர் நவரட்ணராஜா, ஜனாதிபதியின் கிழக்கு விவகார இணைப்பாளர் இனிய பாரதி மற்றும் அவரது தனிப்பட்ட செயலாளர் ஆகியோரே நேற்று இந்தச் சிறைச்சாலைக்குச் சென்று தமிழ்க் கைதிகளைச் சந்தித்துப் பேசினர்.

"தமது அன்றாட விடயங்களைக் கவனிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த அப்பாவித் தமிழர்கள் பல நூற்றுக்கணக்கில் - வெறும் சந்தேகம் என்ற பெயரில் - கைது செய்யப்பட்டு இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றமை வேதனைக் குரியது.இவர்களில், நியாயமான - சந்தேகத் துக்குரிய - காரணங்கள் இல்லாதவர்களை இனங்கண்டு,விரைந்து விடுவிப்பதற்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரிப் பகுதியில் இருந்து மேலும் 3,000 குடும்பங்கள் இடம்பெயரலாம்; மருத்துவ சேவை மேலும் மோசமாகிறது

கொழும்பு, ஒக.27

வன்னியில் தொடரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மேலும் 3,000 குடும்பங்கள் இடம்பெயரும் சூழ்நிலை காணப்படுவதாக ஐக்கிய நாடுகளின் முகவர் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

ஜூன் மாதத்திற்குப் பின்னர் 18 ஆயிரத்து 970 குடும்பங்களைச் சேர்ந்த 74 ஆயிரத்து 119 பேர் இடம் பெயர்ந்துள்ளனர். இவர்களுடன் சேர்ந்து கிளிநொச்சியில் உள்ள இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை ஒருலட்சத்து 34 ஆயிரத்து 868 ஆகக் காணப்படுவதாகவும் ஐக்கிய நாடுகளின் முகவர் அமைப்புகள் தமது வாராந்த அறிக்கையில் தெரிவித்துள்ளன.

பொது இடங்களிலும் திறந்த வெளிகளிலும் தங்கியுள்ள மக்களுக்கான 5 ஆயிரம் தற்காலிக வீடுகள் தேவைப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஐ.நா. அமைப்புகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களின்நிலைமை , தொடரும் இராணுவ நடவடிக்கைகள், ஆட்டிலறித் தாக்குதல்கள் காரணமாகப் பதற்றமானதாகவும்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சப்ரகமுவவில் தமிழ் மக்களின் 45 சதவீதமானோர் வாக்களிக்காததால் பிரதிநிதித்துவம் பறிபோனது

### இ.தொ.கா. பிரமுகர் விளக்குகிறார்

கொழும்பு, ஒக.27

நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தலில் சப்ரகமுவ மாகாணத் தமிழ் மக்களில் 45 வீதமானவர்கள் வாக்களிக்காமல் விட்டதன் காரணமாகவே அம்மாகாணத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் அடியோடு பறி போனது என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

அவர்களிடம் தேசிய அடையாள அட்டைகள் இல்லாமையே அவர்கள் வாக்களிக்க முடியாமைக்குக் காரணம் என்றும், இருப்பினும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிற்கான மக்கள் ஆதரவு சிறிதளவேனும் குறையவில்லை என்றும் அக் கட்சி தெரிவித்துள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் பிரதிக் கல்வி அமைச்சருமான முருகன் சச்சிதானந்தனே இதை நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி முத்தாச்சி நாகமுத்து

சிவன் கோயில் வீதி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் மாலிய வத்தை, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்தாச்சி நாகமுத்து கடந்த 23.08.2008 சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னாச்சி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகமுத்துவின் அன்புத் துணைவியும், நவசிவாயம் (காணி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், கோப்பாய்), காலஞ்சென்ற ரங்கம்மா மற்றும் புவனேஸ்வரி, பிரேமதாஸ், அருட்சோதி (சுவிஸ்), இரட்னேஸ்வரி, குகதாசன், அமிர்தராசா (சுவிஸ்), Dr.சுலோசனா (BSMS) ஆகியோரின் பாசமிகு தாயும், இந்திரலீலா, சின்னத்தம்பி, நடராசா, மாக்கிரெட், தேவராணி (சுவிஸ்), காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் யமுனா, திருமகள் (சுவிஸ்), கிருபாகரன் (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2008) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாலியவத்தை,*
*சங்கானை.* (77492)

தகவல்:
குடும்பத்தினர்.

## தாமோதரம்பிள்ளை இராமலிங்கம்

(ஓய்வுபெற்ற அதிபர், யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்)

கல்வயலைப் பிறப்பிடமாகவும், மீசாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது கிளிநொச்சியில் வசித்தவருமாகிய தாமோதரம்பிள்ளை இராமலிங்கம்(ஒய்வுபெற்ற அதிபர், யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்) 25.08.2008 கிளிநொச்சியில் காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற கலைச்செல்வன், டாக்டர் அருட்செல்வம் (ஆஸ்திரேலியா) தமிழ்ச்செல்வன் (பொறியியலாளர், கனடா), இசைச்செல்வி (கனடா), டாக்டர் கதிர்ச்செல்வன் ஆகியோரின் அன்புத் தந்தையும், டாக்டர் நளாயினி, பூங்கோதை, குகரூபன் (பொறியியலாளர்), டாக்டர் மைதிலி ஆகியோரின் அன்பு மாமனாரும், உதிஷ்டிரன், கார்த்திக், கஸ்தூரி, காவேரி, கிருஷ்ணா, கர்ணன், கோபிதன், வேரகன், தார்மீகன், பூர்விகா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற பொன்னம்மா, சின்னத்துரை ஆகியோரின் சகோதரனும், மனோன்மணி, இராசபூபதி, இரத்தினபூபதி, யோகேஸ்வரி, தர்மபாலன், விஜயபாலன், பத்மநாதன் ஆகியோரின் மைத்துனரும், சந்திரோதயம், சந்திரவதனா, சந்திரலேகா, சந்திரமதி ஆகியோரின் பெரிய தந்தையும், நாகேஸ்வரன், அழகரசி, அன்பரசி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (26.08.2008) செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்

*கனடா.* (77499) E-mail:- (thamil28@hotmail.com)

# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவன மாணவர்களான
தனுசா, பிரசாந்தன், துசாந்தன், லோகசாந்தன்
ஆகியோரின் அன்புத் தந்தை

## இராசா இராசரத்தினம் (குஞ்சன்)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

MATHURAM INSTITUTE, KOPAY. (77502)
இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

# போருட் வெளிவாரிப்பட்டப்படிப்பு அலகும் கணனிகள் கற்கைப் பிரிவும் தம்பசிட்டி, பருத்தித்துறை

எமது நிறுவனத்தில் கல்வி கற்று 01.08.2008 ஆண்டு வெளியிடப்பட்ட பொது கலைமாணி II பரீட்சையில் சித்திபெற்ற 23 மாணவர்களின் பெயர் விவரம்வருமாறு:

1. ஜெயப்பிரியா வைத்தியநாதன்
2. சிவதர்சினி சாந்தலிங்கம்
3. ராதிகா சின்னத்துரை
4. மோகனவதனி பொன்னுத்துரை
5. அமுதா கோபாலகிருஷ்ணன்
6. தனுஸா இராசேந்திரம்
7. சுகந்தினி விஸ்வலிங்கம்
8. கிருஷ்ணகுமாரி நாகேந்திரன்
9. வதனி பஞ்சாட்சரம்
10. பிரகலா பீதாம்பரம்
11. சாமினி புஸ்பராஜா
12. விஜயேந்தி சித்திரநாதன்
13. ராதை ரட்ணம்
14. ராஜினி தங்கவடிவேலு
15. நளாயினி செல்வரட்ணம்
16. விஸ்வநாதகுருக்கள் ஜெகநாதக்குரு
17. யாழினி நடராஜா
18. கதிர்காமநாதன் திருக்குமார்
19. சின்னையா சிவராஜன்
20. சுதர்சனா சிற்றம்பலம்
21. தயாளினி கணபதிப்பிள்ளை
22. நவரட்ணம் கிருஸ்ணகுமார்
23. சின்னத்துரை சுவர்ணா

சிறந்த பெறுபேறுகளை பெற்றுக் கொள்வதற்கு வழிகாட்டிய எமது விரிவுரையாளர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

★ எமது நிறுவனத்தில் 100% மான மாணவர்களும் சித்திபெற்றுள்ளனர்.
சித்தியடைந்த இறுதியாண்டு மாணவர்கள்.

(சி/554424)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஒக. 27

யாழ். போதனா வைத்தியசாலை ஞான வைரவர் ஆலய புனராவர்த்தன பிரஷ்டா அட்டபந்தன கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை முற்பகல் 11.15 மணிக்கு நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு யாகபூசை ஆரம்பமாகி அலங்கார பூசை, கும்பாபிஷேகம், வீதிவலம் என்பன இடம்பெறும். (202)

* * *

*குருநகர் புனித ஆரோக்கியநாதர் ஆலயத் திருவிழாத்திருப்பலி இன்று காலை 7 மணிக்கு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

மாலை 3.30 மணிக்கு புனிதரின் திருச்சொரூபப்பவனி குருநகரில் உள்ள முக்கியமான வீதிகள் ஊடாக இடம்பெறவுள்ளது.

# நாடகக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக. 27

நல்லூர் பிரதேச செயலகமும் செயல்திறன் அரங்க இயக்கமும் இணைந்து நடாத்தும் நாடகக் கருத்தரங்குத் தொடர் II நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் பிரதேச சபை உப அலுவலகம், கொக்குவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## வீட்டுத்தோட்ட வெற்றியாளர்களுக்கான பரிசளிப்பு விழா

''நாமே பயிரிடுவோம் நாட்டைக்கட்டியெழுப்புவோம்'' திட்டத்தின் கீழ் வீட்டுத் தோட்ட செய்கையில் வெற்றியீட்டிய வெற்றியாளர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

விவசாயத் திணைக்களத்தினால் நடத்தப்படும் இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் சி.ரங்கராஜா கலந்து கொள்வார். (50-288)

# தேவை

கல்பேட் 1Kg 370/=வுக்கும் சேவல் 450/=வுக்கும் கொள்வனவு செய்யப்படும். **158/4, தாசன் பாம், கோயில் வீதி, யாழ்ப்பாணம்.**

# மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்ப 1978, உத்தராடம் 1ஆம் கால், கிரகபாவம் 51, அழகான மணமகளுக்கு தகுந்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர்.

**தொடர்பு: 0779050169**
**0212223879**






## முகாமைத்துவ, உதவியாளர்களுக்கு தடைப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக.27

முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுப்பு II உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறமை காண் எழுத்துப் பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் பரீட்சை திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அலுவலக முறைமை (பகுதி I,II), கணக்கீட்டு முறைமை (பகுதி I,II), கணனி அறிவு (பகுதி I,II) ஆகிய பாடங்களுக்கு பரீட்சை நடைபெறவுள்ளது.

(202 - 207)

# திருமண வாழ்த்து

இன்று (27.08.2008) புதன்கிழமை நோர்வேயில் சிவசுப்பிரமணிய ஆலயத்தில் திருமண பந்தத்தில் இணையும்

## துஷாந் - ரிசிகா

தம்பதியினரை பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

அப்பா, அம்மா, தங்கை, அண்ணன் (மலேசியா),
திரு.திருமதி. எஸ்.ரவீந்திரன் குடும்பத்தினர்.
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.

# இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
25 ★ 03 ★ 1941



ஆண்டவன் மடியில்
20 ★ 08 ★ 2006

## அமரர் நடராஜா அருளானந்தம்

தினம் தோறும் உங்கள் நினைவு எமை தீயெனச் சுடுகிறதையா
ஆண்டு கடந்திட்ட போதும் தீரவில்லை எம்மன வேதனைகள்

ஆண்டுகள் பல கடந்தாலும்
உங்கள் அன்பு முகம் மறப்போமா
நாங்கள்வேண்டுதல் செய்கிறோமையா!
வெள்ளை உள்ளம் கொண்டோனின் ஆத்மா சாந்திபெற.

*சங்கரத்தை,*
*வட்டுக்கோட்டை.*

உங்கள் பிரிவால் துயருறும்:
மகன், மருமகன், பேரப்பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள், பெறாமக்கள்.


உள்நாட்டு வெளிநாட்டுகளிற்கான!
துரித தபால்கள் பொதிகள் சேவை

FedEx Express
(யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்)

வாடிக்கையாளரின் நலன்கருதி
லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 750/= ரூபா விதமும்.
கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 810/= ரூபா வரையான விசேட சலுகை.

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடைவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள
WESTERN UNION
MMBL Money Master

திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்றிபியூட்டர்ஸ் முன்பாக)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
14.05.1947



இறப்பு:
27.08.2007

குருத்துவம் 26.10.1977

## அருட்தந்தை B.F.பொனிபேஸ்

'சீவியத்தில் உம்மை நேசித்தோம்
மரணத்தில் உம்மை மறவோம்'

இறைவா உம்மிடம் அழைத்துக்கொண்ட
பொனிபேஸ் வஸ்ரியாம்பிள்ளையை
விண்ணகத்தில் உமது திருவருளில்
அணைத்திட வேண்டுமென்று
உம்மை இரந்து மன்றாடுகின்றோம்

அன்புடன் நினைவு கூரும்
தாய், சகோதரங்கள்.

*இருபாலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு பட்டதாரிகளும் உள்வாங்கப்படவுள்ளனர்

அச்சுவேலி, ஓக.27

தேசிய கல்வியியல் கல்லூரிகளில் பயிற்சிக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் நடைமுறையில் மாற்றம்செய்யப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் இருந்து பட்டதாரிகள் அனுமதிக்கப்பட்டு அவர்களுக்கு 1 1/2 வருடங்கள் ஆசிரியர் தொழில்சார் பயிற்சி வழங்கப்பட்டு ஆசிரியர்களாக நியமிக்கப் படவுள்ளனர்.

'ஆசிரியர்கள்அனைவரும் பட்டதாரிகளாக, தொழில்சார் தகைமை உடையவர்களாக இருக்க வேண்டும்' என்ற தேசியக் கல்விக் கொள்கையின் கோட்பாட்டிற்கு அமையவும், வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைகளுக்கு புதிய தீர்வு காண்பதற்கு வசதியாகவும் புதிய நடைமுறைக்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளது.

புதிய நடைமுறையின் பிரகாரம் தேசிய கல்வியியல் கல்லூரிகளில் பயிற்சிக்கு ஆசிரியர்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பம் பட்டதாரிகளிடம் இருந்து கோரப்படவுள்ளது.

பாடத்துறை வாரியாக அவர்களுக் 1 1/2 வருடங்கள் ஆசிரியர் தொழில்சார் பயிற்சி வழங்கப்பட்டு ''தொழிற்றகைமை பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள்'' என்ற வகையில் ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளது.

தேசிய கல்வியியல் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின்அடிப்படையில் பயிற்சிக்கு தெரிவுகள் செய்யப்பட்டு, ''ஆசிரியர் டிப்ளோமா'' சான்றிதழ் வழங்கப்பட்டு ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு வந்தனர். இந்த வகையில் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதவர்கள் கல்வியியல் கல்லூரி அனுமதி கிடைக்கும் என எதிர்பார்த்தி ருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த வருடம் தொடக்கம் பட்டதாரிகளும் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு பயிற்சியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டாலும் உடற்கல்வி,தகவல் தொழில் நுட்பமும் தொடர்பாடலும், ஆங்கிலம் ஆகிய பாடத்துறைகளுக்கு மட்டுப்படுத்தப் பட்ட அளவில் ஜி.சீ.ஈ உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் பழைய நடைமுறையில் ஆள்களைத் தெரிவு செய்வதற்கும் விசேட ஏற்பாடுகள் செய்யப் பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. (202-11)

# ஈழத்துச் சிதம்பர சுற்றுமதில் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஓக.27

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தின் சுற்றுமதில் புனர்நிர்மாணம் செய்யப்படுகின்றது.புனர்நிர்மானப் பணிகளை யாழ்.அரச அதிபர் கே. கணேஷ், காரைநகர் உதவிஅரச அதிபர் த.ஜெயசீலன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

நிர்மாணப் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன. (202-250)



கட்டடப்பணிகளை அதிகாரிகள் பார்வையிடுகின்றனர்.

# இலங்கை அதிபர் சேவையில் உள்ளவர்களுக்கு திறமை, சேவை மூப்பு அடிப்படையில் பதவி உயர்வு

அச்சுவேலி, ஓக.27

இலங்கை அதிபர் சேவையில் உள்ளவர்களுக்கு திறமை, சேவை மூப்பு அடிப்படையில் பதவி உயர்வு வழங்கப்படவுள்ளது.

அதிபர் சேவையில் உள்ளவர்களிடம் இருந்து கல்வி அமைச்சு இதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய இறுதித் தினம் இம்மாதம் 30 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அதிபர் சேவையில் உள்ளவர்களில் குறிப்பிட்ட வீதத்தினர் சேவை மூப்பு, திறமை அடிப்படையில் அதிபர் சேவையின் அடுத்த தரநிலைக்கு பதவி உயர்த்தப்பட வேண்டும் என இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் இலங்கை அதிபர் சேவை தரம் 3, தரம் 2;II, தரம் 2;I, தரம் I பதவியில் உள்ளவர்கள் குறிப்பிட்ட காலச் சேவை, திறமை அடிப்படையில் அடுத்த தர நிலைக்கு பதவி உயர்த்தப்பட வேண்டும். அதிபர் சேவையில் பதவி உயர்வு வழங்குவதற்கு ஏதுவாக சம்பந்தப்பட்ட அதிபர்கள் சுயவிவரம் மற்றும் தகவல்களை உள்ளடக்கிய விண்ணப்பங்கள் கல்வி அமைச்சினால் வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக திரட்டப்படுகின்றன.

எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. உரிய விண்ணப்பப் படிவங்கள் மத்திய கல்வி அமைச்சினால் வலயக்கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (202-11)

# தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளில் குதூகல கணக்கு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.27

தேசிய சேமிப்பு வங்கியின் குடாநாட்டுக் கிளைகளில் குதூகல சேமிப்புக் கணக்கு இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஆயிரம் ரூபா முதல் வைப்புக்களை மேற்கொள்ளஇக்கணக்குவகைசெய்கின்றது.

வைப்புகளுக்குக் கூடிய வட்டி, 10 லட்சம் ரூபா வரையான ஆயுள் காப்புறுதி, இலவசமாக 'ஏரிஸம்' அட்டை, கட்டுப்பாடற்ற மீளப்பெறல்கள் உட்பட மேலும் பல சலுகைகளை இக்கணக்கு வழங்குகின்றது. (202)

# மானிப்பாய் பிரதேச வைத்தியசாலை நாளை சம்பிரதாயபூர்வமாகத் திறப்பு

நவாலி, ஓக 27

மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலையின் புதிய கட்டடம் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

வைத்தியசாலை அபிவிருத்திச் சபைத் தலைவர் இ.மனோகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்திய கலாநிதி எஸ்.குமாரவேற்பிள்ளையும் கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், யாழ்.மாவட்ட மலேரியாத் தடைப் பொறுப்பதிகாரி கா.த.சிவபாதம், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ரூபினி வரதலிங்கம், மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டினேஸ் ஜெயக்குமாரன், ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரி பொ.பேரானந்தம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (202-100)

# பொன்னாலை வரதராஜ ஆலய தீர்த்தத்திருவிழாவில் ஆயிரக் கணக்கில் பக்தர்கள்

சுழிபுரம்,ஓக.27

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆலய தீர்த்தத் திருவிழா சுழிபுரம் திருவடி நிலை தீர்த்தக் கரையில் நடைபெற்றது.

ஆயிரக்கணக்கான கடந்த வருடங்களை விட அதிகமான பக்தர்கள் இத் திருவிழாவில் பங்குபற்றி கடலில் தீர்த்தம் ஆடினர்.

ஆலயத்தில் இருந்து மஞ்சத்தில் பக்தர்கள் புடைசூழ சுவாமி தீர்த்த மண்டபத்திற்கு எழுந்தருளி தீர்த்தமாடினார். (202-28)

# நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.27

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முதுகலைமாணிக் கற்கை நெறியின் பிரதேச திட்டமிடல் மாணவர்களின் அனுசரணையுடன் 'அரச அலுவலக தாபன நடை முறை' என்னும் நூல் வெளியிடப்படவுள்ளது.

நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பிரதேசசெயலர் ம.ஜெகூ தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வெளியீட்டுரையை யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் மதீப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடப் பீடாதிபதி க. தேவராசாவும் ஏற்புரையை யாழ்.போதனா வைத்திய சாலைக் கணக்காளர் நா.இராசநாயகமும் நிகழ்த்துவர். (202)

* * *

யாழ்ப்பாணம், ஓக 27

நல்லூர் திருவிழாக் காலத்தில் இராம கிருஷ்ண மிசன் வெளியீடுகளின் கண்காட்சியும் விற்பனையும் நல்லூர் முருகன் ஆலய வடக்கு வீதியில் நடைபெறவுள்ளன. (202)

* * *

யாழ்ப்பாணம், ஓக 27

யெகோவாவின் சாட்சிகளுடைய மாவட்ட மாநாடு நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை தொடக்கம் 3 தினங்களுக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'கடவுளுடைய சக்தியால் வழிநடத்தப்படுதல்' என்னும் பொருளில் நடத்தப் படவுள்ள இம் மாநாடு தினமும் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும். (202)

## தேர்த்திருவிழா அன்று வர்த்தக நிலையங்களின் ஊழியர்களுக்கு விடுமுறை

யாழ்ப்பாணம்,ஓக.27

நல்லூர் கந்தசாமி கோயில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை சகல வர்த்தக நிலையங்களையும் பூட்டி வர்த்தக ஊழியர்களுக்கு விடுமுறை வழங்குமாறு யாழ்.வணிகர் கழகம் தெரிவித்துள்ளது. (202)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# சுழிபுரம் விக்ரோறியாவில் இரண்டு மாடிக் கட்டடம்

சுழிபுரம்,ஓக.27

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் இரண்டு மாடிகள் கொண்ட கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் திருமதி அ.வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் சி.ரங்கராஜா கலந்து கொள்வார்.

இக் கட்டடத்திற்கான நிதி உதவியை வெளிநாட்டு நிறுவனம் ஒன்று வழங்கவுள்ளது.

நூலகம், கணனி அறை ஆகியவைகளைக் கொண்ட வகுப்பறைத் தொகுதிகள் இக் கட்டடத்தில் அமையவுள்ளன. (202-28)




பருத்தித்துறை பிரதேசசபையின் உள்ளூராட்சிவார நிகழ்வுகள் திக்கம் கலாசார மண்டபத்தில் நடைபெற்றன.

நிகழ்வில் முன்னாள் யாழ்.மேலதிகக்கல்விப் பணிப்பாளர் வி.சிவராசா மங்கள விளக்கேற்றுவதையும், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் உரையாற்றுவதையும் முதலிரு படங்களிலும் காணலாம்.

பருத்தித்துறைப் பிரதேசசபையின் முன்னாள் செயலாளர் சி.பசுபதி, ... வி. விசுவலிங்கம், பருத்தித்துறைப் பிரதேசசபைச் செயலாளர் ச. சந்திரமோகன ஆகியோர் இறைவணக்கத்தில் ஈடுபட்டிருப்பதையும், சிறுவர்களின் ... அடுத்துள்ள படத்தில் காணலாம். (படங்கள்: கண்ணன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சேவை நலன் பாராட்டு



திருவாளர்
**செபஸ்தியாம்பிள்ளை அன்ரன்**
அதிபர் தரம் 1
யா/மயிலிட்டி றோ.க.த.க. பாடசாலை

தனது 36 வருட சேவையினை நிறைவு செய்து நிறைவான உள்ளத்துடன் ஓய்வு பெறும் எமது அதிபர் திரு.செபஸ்தியாம்பிள்ளை அன்ரன் அவர்களை ஓய்வு பெறும் இந்நாளில் தங்கள் சேவையினை நன்றியுடன் நினைவு கூர்ந்து வாழ்த்துத் தெரிவிக்கும் அன்பு உள்ளங்கள்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/மயிலிட்டி றோ.க.த.க. பாடசாலை,
ஆனைக்கோட்டை.

27.08.2008 (77475)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 12 | 27 |
| 11 | 08 |
| 1939 | 2007 |



**திருமதி இராசதுரை பத்தர் இராசலட்சுமி**

அன்பிலுயர் தெய்வமாக இம் மண்ணில் வாழ்ந்தீரே
அன்புடன் சைவ பண்புடன் வாழ்ந்து
அதன் பண்புடன் எம்மை வளர்த்தீரே!
அன்பில் தவம் இருந்து எம்மை
ஈன்று எடுத்த தாயே! இப்பூவுலகு போதும்
என்று எண்ணி அம்பாள் திருவடி ஐக்கியமாகி
விட்டீரே உமது நினைவில் வாழும்

கணவர், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், மருமகன்மார்,
உறவினர்.

புதிய செம்மணி வீதி,
585, சிங்காரஜர் லேன்,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
**தம்பிராசா ரவிச்சந்திரன்**

அன்னை மடியில் :05.04.1963
அரக்கன் அழிப்பில் :14.07.2008



உங்கள் பிள்ளைச் செல்வங்களுக்கு
அன்புத் தந்தையாய்
கொள்ளை சுகமளித்த கோமானே!
எம்மினிய அப்பாவே!
கண்ணும் கருத்துமாய்
எமையெல்லாம் காத்தீர்கள்
கடைசியில் காடையர்களால்
எமை விட்டுப் போனீர்கள்
கண்ணீர் சிந்துகின்றோம்
கடவுளிடம் ஆத்ம சாந்திக்காய்.

அம்பனை,
சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம்.

பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### கந்தையா குழந்தைவேலு



மஞ்சத்தடி, இணுவிலைச் சேர்ந்த கந்தையா குழந்தைவேலு 25.08.2008 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-செல்லம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கணேசு மற்றும் பசுபதி, காலஞ்சென்ற மகேஸ்வரி சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான தங்கச்சி அம்மா, சுப்பிரமணியம் (புகையிரத நிலைய அதிபர்) மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் க.முருகையா (கிராம அலுவலர் (J/115, J/118), Dr.திருமதி இராஜேஸ்வரி கருணாமூர்த்தி (யாழ்.போதனா வைத்திய சாலை), ப.எழிற்செல்வி ஆகியோரின் சிறியதந்தையும் திருமதி மு.அருந்தவமலர், சி.கருணாமூர்த்தி (விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசாலை) ஆகியோரின் அன்பு மாமனும் மு.கேதனன், மு.சுவேதனன் (மாணவன், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி) ஆகி யோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (26.08.2008) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இணுவில் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். தகவல்:

க.முருகையா
கிராம அலுவலர்
கோண்டாவில் வடமேற்கு - J/115
கோண்டாவில் மத்தி கிழக்கு J/118 (மகன்)

மஞ்சத்தடி,
இணுவில்.

# எங்களது பாரம்பரியத்தின் ஊடாக விதைக்கப்பட்ட நற்பண்புகளை வளர்க்க வேண்டியது மாணவர் கடமை

### கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி தமிழ் விழாவில் உதவிக் கல்விப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஒக.27

எங்களிடையே வழக்கிலுள்ள வாய்மை, கண்ணோட்டம், அன்பு, ஒப்புரவு என்னும் நற்பண்புகள் எமது பாரம்பரியத்தூடாக விதைக்கப்பட்டவை. அவற்றைப் பாதுகாக்க வேண்டியது எல்லோரதும், குறிப்பாக வருங்கால சந்ததியினரான மாணவர்களின் பொறுப்பாகும்.

இவ்வாறு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் தெரிவித்தார்.

இவ்விழாவில் அவர் மேலும் உரையாற்றுகையில்

''இணைப்பாட விதான செயற்பாடுகளில் மிகவும் முக்கியமான பங்கினை இத்தமிழ்விழா நிறைவு செய்துள்ளது. சிறந்த மனப்பாங்கு, கலையார்வம், ஞாபக சக்தி, மனிதநேயம் என்பவற்றை இந்த விழா மூலம் வளர்க்க முடிந்துள்ளது. காவடி, கோலாட்டம், கும்மி போன்ற பாரம்பரிய நடனங்களோடு, தீபமேந்திய பெண் மாணவிகளால் நாம் அழைத்து வரப்பட்ட போது, ஒரு பந்தலின் கீழ் வந்ததைப் போல் உணர்ந்தேன்'' என்று கூறினார்.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் இராஜசேகரம் தலைமையில் நடைபெற்ற தமிழ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா கலந்து கொண்டார்.

(04)

## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையில் உள்ள 400 புதிய,பழைய திரைப்படக் கசெற்றுக்கள் மற்றும் 300 புதிய,பழைய திரைப்பட இறுவட்டுகள்(C.D),அவற்றுக்குரிய அலுமினிய றாக்கைகள், தொலைபேசிக் கூடுகள்(ரெலிபோன்ப் பூத்)இரண்டு சேர்ந்தது உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:021-4590199, 021-4590165

## உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

வலி.வடக்கு, ஒக.27

ஏழாலை அம்பாள் மத்திய விளையாட்டுக் கழகம் லீக்குகளில் பதிவு செய்யப்படாத விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* உரும்பிராய் திருக்குமரன் வி.க. எதிர் போயிட்டி யுத் ஸ்ரார் வி.க.
* சிறுவிளான் ஞான உதய வி.க. எதிர் தெல்லிப்பளை பூமா வி.க.

(1-86)

## சீட்டிழுப்பு முடிவுகள்

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தின் 43ஆவது ஆண்டு நிறைவு விழா வை முன்னிட்டு வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் வளர்ச்சி நிதிக்காக 22.08.2008 அன்று நடத்தப்பட்ட அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள் பின்வருமாறு:

முதல் பரிசுக்கான இலக்கம்-1900
இரண்டாம் பரிசுக்கான இலக்கம்-724
மூன்றாம் பரிசுக்கான இலக்கம்-1405

பத்து ஆறுதல் பரிசுகளுக்கான இலக்கங்கள்:

| | |
|---|---|
| 01-4075 | 06-681 |
| 02-780 | 07-3039 |
| 03-1919 | 08-1804 |
| 04-1977 | 09-2238 |
| 05-4681 | 10-4935 |

மேற்படி பரிசுகளை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் வளர்மதி சனசமூக நிலையத்தில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நிர்வாகிகள்.

## போரூட் வெளிவாரிப் பட்டப் படிப்புகள் அலகின் கண்ணீர்ப் பூக்கள்

**அமரர் கதிர்காமத்தம்பி அருளானந்தம்** விரிவுரையாளர்

கடந்த ஒரு வருட காலமாக எமது நிறுவனத்தில் தமிழ்ப் பாடம் விரிவுரையாற்றி இவ்வுலகை விட்டு 21.08.2008இல் பிரிந்து சென்ற அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நிர்வாகத்தினரும்,
சக விரிவுரையாளர்களும், மாணவர்களும்,
போரூட் வெளிவாரிப் பட்டப் படிப்புகள் அலகு.

தம்பசிட்டி,
பருத்தித்துறை.

(ஏ/554425)

## திருமண வாழ்த்துக்கள்

எமது அலுவலகத்தில் முன்னர் உதவித்திட்ட பணிப்பாளராக கடமையாற்றிய

**இ.தவகுமாரன்** அவர்கள் இன்றைய தினம் (27.08.2008) **லோஜினி** அவர்களுடன் திருமணபந்தத்தில் இணைகின்றார். புதுமணத் தம்பதிகள் பதினாறு செல்வங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

பிரதித் திட்டப்பணிப்பாளரும்,
சக அலுவலர்களும்
நிகோட்
மாவட்டச் செயலகம்
யாழ்ப்பாணம்.

(77489)


## A/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

புலமைப்பரிசில் திட்டம் 2008

| Course | Duration | Old price | Price |
|---|---|---|---|
| Diploma in Computer Science | 4 Months | ~~10,750~~ | 2,150 |
| Honours Diploma in Computer Science | 5 Months | ~~13,000~~ | 2,600 |
| Diploma in Web page Designing | 4 Months | ~~10,750~~ | 2,150 |
| Diploma in Graphic Designing | 4 Months | ~~10,750~~ | 2,150 |
| Diploma in Desktop Publishing | 4 Months | ~~10,000~~ | 2,000 |
| Diploma in Hardware Engineering | 3 Months | ~~10,000~~ | 2,000 |
| Diploma in AutoCAD | 3 Months | ~~10,000~~ | 2,000 |
| Diploma in Microsoft Office | 3 Months | | 1,500 |
| Accounting Package | 3 Months | ~~10,750~~ | 2,150 |

80% OFF

Lab
Multimedia Projector

50% OFF

| Course | Old price | Price |
|---|---|---|
| Diploma in multimedia | ~~5,500~~ | 2,750 |
| Diploma in Video Editing | ~~6,500~~ | 3,250 |

ஆரம்பம்:
Batch I 29/08/2008 - 11AM
Batch II 30/08/2008 - 09 or 01
Batch III 31/08/2008 - 09 or 01
Batch IV 03/09/2008 - 11AM

COMPUTER EXPRESS
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
#167, KASTHURIYAR RD, JAFFNA. 021 222 8250


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17 வயதுப் பிரிவு கிரிக்கெட் சுற்றுப்போட்டி; ஆறு அணிகள் 'சுப்பர் 6' சுற்றுக்குத் தெரிவு

## இன்று ஆட்டங்கள் ஆரம்பம்

வலி.வடக்கு,ஓக.27

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஆறு அணிகள் 'சுப்பர் 6' சுற்றுக்குத் தெரிவாகின.

ஆட்டங்கள் இன்று புதன்கிழமை ஆரம்பமாகவிருக்கின்றன.

களை கட்டுகிறது பாடசாலைகளின் கிரிக்கெட் கொண்டாட்டம் — துடியன்

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ்ப்பாணப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தி வரும் 17 வயதுப் பிரிவினருக்கான சுற்றுப்போட்டியில் 'சுப்பர் 6' சுற்றுக்கு முதல் சுற்றில் வெற்றி பெற்ற அடிப்படையில் 6 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

மானிப்பாய் இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் 'ஏ' அணி, கொக்குவில் இந்துக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆகியனவே தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இன்று புதன்கிழமை ஆட்டங்கள் இடம்பெறும். இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள பாடசாலை அணிகளின் விவரங்கள் வருமாறு:

* *யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானம்* - யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி.
* *பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானம்* - கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.

(1-86)

# உள்ளூராட்சிக் குழு வெற்றி பெற்றது

மந்திகை,ஓக.27

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நெல்லியடி செல்லமுத்தூஸ் புடைவையகத்தின் அனுசரணையுடன் வடமராட்சி அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், வங்கிகளுக்கிடையே நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் உள்ளூராட்சி மன்றங்களின் குழு வெற்றி பெற்றது.

பருத்தித்துறை நீதிமன்ற விளையாட்டுக் குழுவை எதிர்த்து மோதிய வடமராட்சி உள்ளூராட்சி மன்றங்களின் குழு வெற்றி பெற்றது. (1-218)

# விக்னேஸ்வராவை வென்றது யூனியன்

வலி.வடக்கு,ஓக.27

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கியின் அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 15வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் 'சுப்பர் 6' ஆட்டம் ஒன்றில் தெல்லிப்பழை யூனியன் 36 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி 313 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 108 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

ஜோய் கிறேசியன் நான்கு நான்குகளுடன் 33 பந்துகளில் 27, பானுசன் நான்கு நான்குகளுடன் 18, சிலோசன் ஒரு ஆறு ஒரு நான்குடன் 17 ஓட்டங்களை பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 21 ஓட்டங்களும் பெறப்பட்டன.

அபிராம் 09 ஓவர்கள் பந்துவீசி 04 ஓட்டமற்ற ஓவர்களுடன் 20 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும், அனுசாந் 5.3 ஓவர்கள் பந்துவீசி 24 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும், ஆதவன் 05 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 13 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும், இராகுலன் 09 ஓவர்கள் பந்துவீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 24 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

109 என்ற குறைந்த ஓட்ட எண்ணிக்கையை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய விக்னேஸ்வராக் கல்லூரி 21.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 72 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது.

அருள்ராஜ் ஒரு நான்குடன் 10 ஓட்டங்களையும் உதிரிகளாக 34 ஓட்டங்களும் பெறப்பட்டன. பிரசாந் 06 ஓவர்கள் பந்துவ்சி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 13 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும், இராகுலன் 07 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 15 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும், பானுசன் 1.2 ஓவர்கள் பந்துவீசி 04 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள். (1-186)

# பிரியதர்சனின் அபார பந்துவீச்சினால் சென்றலை அசத்தியது சென்.ஜோன்ஸ்


பிரியதர்சன்

வலி.வடக்கு,ஓக.27

யாழ்.பாடசாலைகளுக்கிடையிலான 17வயதுப் பிரிவு கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணி யாழ்.மத்திய கல்லூரியை வென்றது.

அணி வீரர் பிரியதர்சன் அபாரமாகப் பந்துவீசி 34 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளைச் சாய்த்து அணி வெற்றி இலக்கை அடைய வித்திட்டார்.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ்ப்பாணப் பாடசாலை அணிகளின் 17 வயதுப் பிரிவினருக்கு இடையே நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணியும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் மோதிக்கொண்டன.

சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடந்த இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 50 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 199 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

கஜீபன் எட்டு நான்குகளுடன் 58 பந்துகளில் 46, யோகேஸ்வரன் 33, ஹரிவதனன் ஆறு நான்குகளுடன் 27, பிரணவன் 20 மற்றும் அலெஸ் டியோன் ஆட்டமிழக்காது 15 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

கோபிகன் 10 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 36 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும், ஹரிஸ் 09 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 24 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும், ரதீசன் 09 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 36 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், குகானந்தன் 02 ஓவர்கள் பந்துவீசி 15 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், தர்சன் 06 ஓவர்கள் பந்துவீசி 13 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

200 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 35 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 184 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது.

ஜெனோசன் ஏழு நான்குகள், ஒரு ஆறுடன் 74 பந்துகளில் 60 ஓட்டங்களையும் ரதீசன் மூன்று நான்குகள், ஒரு ஆறுடன் 28, ஜேம்ஸ் ஜான்சன், ஹரிஸ் 15, குகானந்தன் 14 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பிரியதர்சன் 09 ஓவர்கள் பந்துவீசி 34 ஓட்டங்களுக்கு 05 விக்கெட்டுகளையும், ஹரிவதனன் 05 ஓவர்கள் பந்துவீசி 32 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும், சஞ்சீவன் 07 ஓவர்கள் பந்துவீசி 32 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும், விதுசன் 04 ஓவர்கள் பந்துவீசி 21 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# கூடைப்பந்தாட்டப் போட்டியின் சாதனையாளர்கள்


துஷ்யந்தி


ஆன் பெனாசிர்


மேசி


ரிசானா


கீர்த்தனா


துஷ்யந்தி


சோபா

வலி.வடக்கு,ஓக.27

இலங்கைப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சங்கம் முதன் முதலாக யாழ்.பாடசாலைகளுக்கு இடையில் சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தியது.

உடுவில் மகளிர் கல்லூரியில் இடம் பெற்ற இச்சுற்றுப்போட்டியில் ஆட்டநாயகி, ஆட்டத்தொடர் நாயகி, சிறந்த வீராங்கனைகள் தெரிவுசெய்யப்பட்டு வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்பட்டன.

கௌரவிக்கப்பட்டோர் விவரம் வருமாறு:

* ஆட்டநாயகி- யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலையைச் சேர்ந்த துஷ்யந்தி.
* தொடர் ஆட்டநாயகி- உடுவில் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மேசி.
* பாடசாலை மட்டத்திலான 17 வயதுப் பிரிவுக்கான சிறந்த கூடைப்பந்தாட்ட வீராங்கனைகளின் விவரம் வருமாறு:
* யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலையைச் சேர்ந்த ஆன் பெனாசிர், உடுவில் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ரிசானா.

யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த கீர்த்தனா.

* கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த துஷ்யந்தி.
* பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த சோபா.

(1-86)

# மின்சார சபை அணிகளுக்கிடையிலான துடுப்பாட்டம் யாழ்.நகர - சுன்னாகம் மத்திய நிலைய அணிகள் இறுதியில்!


பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடவலய பிரதிப் பொது முகாமையாளர் ஆர்.முத்துரட்ணானந்தன், பிரதம பொறியியலாளர் எஸ்.ஞானகணேசன் ஆகியோருக்கு வீரர்கள் அறிமுகம் செய்து வைக்கப்படும் காட்சி...

யாழ்ப்பாணம்,ஓக.27

இலங்கை மின்சார சபை வடமாகாண ஊழியர் நலன்புரி விளையாட்டுச் சங்கத்தினால் யாழ்.மாவட்ட இலங்கை மின்சார சபையின் பணிமனைகளின் அணிகளுக்கிடையே நடைபெற்று வரும் மென்பந்துத் துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்திற்கு சுன்னாகம் மத்திய மின்நிலைய அணியும் யாழ்.நகர மின்பாவனையாளர் சேவை நிலைய அணியும் தகுதி பெற்றுள்ளன.

இந்தச் சுற்றுப்போட்டியில் பிரதிப் பொது முகாமையாளர் (வடக்கு) அலுவலக அணி, சுன்னாகம் மத்திய மின்நிலைய அணி, யாழ். பிரதேச பணிமனை, கட்டமைப்புப் பகுதி மற்றும் சுன்னாகம் மின்பாவனையாளர் சேவை நிலையம் இணைந்த அணி, பருத்தித்துறை மற்றும் சாவகச்சேரி மின்பாவனையாளர் சேவை நிலையம் இணைந்த அணி, வட்டுக்கோட்டை, வேலணை மற்றும் யாழ். புறநகர் மின்பாவனையாளர் சேவை நிலையம் இணைந்த அணி, யாழ்.நகர மின் பாவனையாளர் சேவை நிலைய அணி ஆகிய ஆறு அணிகளும் மூன்று பிரிவுகளாகக் களமிறங்கி மோதிக்கொண்டன.

போட்டியின் ஆரம்ப வைபவத்தில் பிரதம விருந்தினராக மின்சார சபையின் வட பிராந்திய பிரதிப் பொதுமுகாமையாளர் ஆர்.முத்துரட்ணானந்தனும் சிறப்பு விருந்தினராக பிரதம பொறியியலாளர் எஸ்.ஞானகணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். ஈச்சமோட்டை விளையாட்டு மைதானத்தில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன.

இறுதிப்போட்டியில் பங்குபற்றும் அணிகளைத் தெரிவுசெய்வதற்கான போட்டியில் பிரதிப் பொதுமுகாமையாளர் அலுவலக அணியை எதிர்த்து சுன்னாகம் மத்திய நிலைய அணியும் யாழ்.நகர மின்பாவனையாளர் சேவை நிலைய அணியை எதிர்த்து யாழ்.பிரதேச பணிமனை, கட்டமைப்புப் பகுதி மற்றும் சுன்னாகம் மின்பாவனையாளர் சேவை நிலையம் இணைந்த அணியும் மோதிக்கொண்டன. இதில் சுன்னாகம் மத்திய மின் நிலைய அணியும் யாழ்.நகர மின் பாவனையாளர் சேவை நிலைய அணியும் இறுதிப்போட்டிக்குத் தெரிவாகின.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள நலன்புரிச்சங்க ஒன்றுகூடலின்போது இறுதிப்போட்டி நடைபெறும். (50)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ். வலய கணித, விஞ்ஞான போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஓக.27

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே கல்வித்திணைக்களத்தினால் நடத்தப்பட்ட கணித, விஞ்ஞானப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

வெற்றி பெற்றவர்களின் பெயர் விவரம் வருமாறு:

**கணிதம் - ஆங்கில மூலம்**

*தரம் 6:* எம்.ஆகாசன் (யாழ்.மத்திய கல்லூரி), ஆர்.கீர்த்திகா (வேம்படி மகளிர்), எச்.மேசிகன் (யாழ்.இந்துக் கல்லூரி).

*தரம் 7:* ஈ.சிவேஸ்வரன் (யாழ்.இந்துக் கல்லூரி), எஸ்.பாவணா (வேம்படி மகளிர் ), ஆர்.ஆன் அனிசியா ஆன்சலா (திருக்குடும்ப கன்னியர் மடம் பாட.)

*தரம் 8:* பி.டினேஷன் (யாழ்.இந்துக் கல்லூரி), பி.குணவரன் (யாழ்.இந்துக் கல்லூரி), எஸ்.திரியம்மகி (வேம்படி மகளிர் கல்லூரி).

*தரம் 9:* என்.அமிழ்தினி (வேம்படி மகளிர்), பி.புவனநாத் (இடைக்காடு ம.வி.), ஐ.லக்ஷியா (வேம்படி மகளிர் ).

*தரம் 10:* எஸ்.சுமிதா (வேம்படி மகளிர் கல்லூரி), என்.சரணியா (வேம்படி மகளிர் கல்லூரி), எஸ்.அமுதீஸ்வரன் (யாழ்.இந்துக் கல்லூரி).

*தரம் 11:* ரி.சஜிதா (யாழ்.வேம்படி மகளிர்), பி.ஆரணி (யாழ்.வேம்படி மகளிர்), எஸ்.செல்வநித்திலன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி).

**கணிதம் - தமிழ் மொழி மூலம்**

*தரம் 6:* ரி.ஹம்சா (யாழ்.இந்துக் கல்லூரி), எஸ்.டானிகா (வேம்படி மகளிர் ), ஈ.டிலக்ஷியன் (யாழ்.இந்துக் கல்லூரி).

*தரம் 7:* எம்.பவித்திரா (வேம்படி மகளிர்), எஸ்.தனுஷன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), என்.பிரசாந் (அரியாலை சிறிபார்வதி வித்தி.).

*தரம் 8:* எம்.சுதர்சன் (யாழ்.இந்துக் கல்லூரி), எம்.சோபிதன் (யாழ்.இந்துக் கல்லூரி, எஸ்.சுரேஜன் (கோப்பாய் நாவலர் வித்தி.).

*தரம் 9:* ஆர்.யதுசன் (யாழ்.இந்துக் கல்லூரி), எம்.கஜனி (வேம்படி மகளிர்), என்.பிருந்தா (வேம்படி மகளிர்).

*தரம் 10:* வி.நாராயணி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), பி.சங்கீதா (வேம்படி மகளிர் ), எஸ்.நர்சுஜா (வேம்படி மகளிர்).

*தரம் 11:* எஸ்.கௌதமி (வேம்படி), கே.சஜிதா (வேம்படி மகளிர்), பி.சேகரன் (யாழ்.இந்து).

**விஞ்ஞானம் - தமிழ் மொழி மூலம்**

*தரம் 6:* ஏ.அபிராமி (வேம்படி மகளிர்), எஸ்.தாட்சாயினி (சுண்டிக்குளி மகளிர்), எம்.மதுரன் (யாழ்.இந்து).

*தரம் 7:* எம்.பவித்திரா (வேம்படி மகளிர்), ரி.துவாரகன் (யாழ்.இந்து), எஸ்.சிறியுகன் (யாழ்.மத்திய கல்லூரி).

*தரம் 8:* யூ.பானுஷா (சுண்டிக்குளி மகளிர்), எஸ்.தர்சிகா (வேம்படி மகளிர்), கே.காயத்திரி (சுண்டிக்குளி மகளிர்).

*தரம் 9:* ஆர்.அனற்ரூபிஷா (வேம்படி மகளிர்), ரி.லாவண்யா (வேம்படி மகளிர்), எஸ்.அச்சுதை (வேம்படி மகளிர்).

*தரம் 10:* ஆர்.பவித்திரா (வேம்படி மகளிர்), வி.லக்ஷனா (சுண்டிக்குளி மகளிர்), எஸ்.சிறிதரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

*தரம் 11:* ஏ.அபிராமி (வேம்படி மகளிர்), ரி.நிரோஜன் (ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி), எஸ்.வினோதினி (கொக்குவில் இந்து).

**விஞ்ஞானம் - ஆங்கிலமொழி மூலம்**

*தரம் 6:* ஆர்.கீர்த்திகா (வேம்படி மகளிர்), டி.யூலி யஸ் ஷரோன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), எம்.ஆகாஷன் (யாழ்.மத்திய கல்லூரி).

*தரம் 7:* எஸ்.விண்ணுஷா (வேம்படி மகளிர்), பி.ஆர்த்தீபன் (யாழ்.இந்து), ரி.லக்ஸ்மன் (யாழ்.இந்து).

*தரம் 8:* பி.டினேஷன் (யாழ்.இந்து), சி.திலக்ஜி (வேம்படி மகளிர்), சி.விவேக் வினுஷந் (யாழ. இ[illegible] கல்லூரி).

*தரம் 9:* ஆர்.பிரணவன் (யாழ்.இந்து), எஸ்.நர்த்தனா (வேம்படி மகளிர்), ஜி.இந்துஷா (வேம்படி மகளிர்).

*தரம் 10:* எஸ்.மதுரயி (சுண்டிக்குளி மகளிர்), என்.சரணியா (வேம்படி மகளிர்), யே.விதுஜா (சுண்டிக்குளி மகளிர்).

*தரம் 11:* ஏ.சஞ்சயன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), எஸ்.கோபிநாத் (யாழ்.இந்து), ஜி.லக்ஷி (வேம்படி மகளிர்). (202-302)


IIS

BIT

Bachelor of Information Technology
University of Colombo School of Computing

Semester 1
விரிவுரைகள் ஆரம்பம்
30.08.2008
(பகல் 10.00)

தெரிவுப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ் மாவட்டத்தில் இருந்து தெரிவுப் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த மாணவர்களுக்கான விரிவுரைகள் 30.08.2008 அன்று காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. எனவே மாணவர்கள் அலுவலகத்தில் பதிவினை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்

தெரிவுப் பரீட்சை பெறுபேறுகளை மாணவர்கள் எமது அலுவலகத்தில் பார்வையிடலாம் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

BIT கல்விக்குத் தனித்துவம் மிக்க IIS City Campus உடன் இணைந்து கணனிப் பட்டதாரியாகும் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

IIS CITY CAMPUS
# 200, Sivapannai Road
(Near Vaitheeswara Junction)
Jaffna
Tel : 021 222 8060
Fax : 021 222 6933





All Students & Workers Can face the future With confidence

IBMS

Basic level
ENGLISH

A General English Course designed to cover and improve the 4 main language skills of Reading, Writing, Listening & Speaking.

Commencement:-29th,31st August 2008. Register Before :28th August 2008
Duration :-3Months Time:-10.00 am

G.C.E O/L மாணவர்களுக்கான
Eniglih Literature

G.C.E O/L மாணவர்களுக்கான Eniglih Literature வார,வார இறுதி வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன. ஓர் பிரிவில் 30 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். ஆகவே உங்கள் பதிவுகளை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

2008 O/L பரீட்சைக்கு தோற்ற இருக்கும் மாணவர்களே இவ்வரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள்

ஆரம்பம்
29.08.2008
31.08.2008
பகல் 10.00மணி

INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES
#209, மானிப்பாய் வீதி, வைத்தீஸ்வராச்சந்தி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 8232 Fax: 021 222 6933


ஓம் சாயிராம்

## முதலாம் ஆண்டு நினைவுகளில்.....



## அமரர் அ.தியாகராஜா

ஆண்டொன்று ஆனதிங்கே அன்புருவே உமையிழந்து
பண்பும் அன்பும் இணைந்த பாசமிகு தியாகத் திருவுருவே!
கருணையின்றிக் காலன் கணப்பொழுதில் கவர்ந்தானே
கண்ணீர் மல்கிக் கலங்கி நிற்கின்றோம்.

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
மனைவி, மகன்,
மருமகள், பேர்த்தி, உறவினர்கள்.

19,A.Clifford Pl,
Colombo- 04.
(77454)


INTERNATIONAL SCHOOL MANIPAY
சர்வதேச பாடசாலை மானிப்பாய்





## நீங்காத நினைவுகளுடன் முதலாம் ஆண்டில்...

மண்ணில்: 14.05.1947

குருத்துவ நாள்: 26.10.1977



விண்ணில்: 27.08.2007

அருட்தந்தை
## B.F.பொனிபஸ்

"எளியோரின் நலனில் அக்கறை கொள்பவர் பேறுபெற்றவர் துன்பநாளில் ஆண்டவர் அவரை விடுவிப்பார்." (திருப்பாடல்கள் 41:1)

உங்கள் ஆன்மா இறைவனில் சாந்திபெற என்றும் பிரார்த்திப்போம்.

யாழ்ப்பாணம்.

தாய், சகோதரர்,
[பெறாமக்கள்] பிள்ளைகள், உறவினர்.

சிவமயம்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



## நாகலிங்கம் ஜெயரஞ்சிதன் J.P.

பண்பால் நல்லறிவால் பாரினில் சிறந்து விளங்கி எண்ணுக நல்லவற்றை என்றே ஏற்றம் அதுவே என்று ஐயமில் வார்த்தை காட்டி இகத்தில் வாழ்ந்து காட்டி எம்மையெல்லாம் 28.07.2008 அன்று இரவு விட்டுப் பிரிந்த எங்கள் குடும்பத் தலைவர் நாகலிங்கம் ஜெயரஞ்சிதன் (சமாதான நீதவான்) அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (27.08.2008) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்றது. அன்னாரின் ஆத்மா இறைவனின் அடியில் சாந்திபெறப் பிரார்த்திப்போமாக.

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை. (77459) குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டதனில் பிரார்த்திக்கின்றோம்

அன்னை மடியில் 11 . 08 . 1930

அம்பலத்தாடுவான் அடியிணையில் 11 . 09 . 2004



## திருமதி மனோரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்

(ஆவணிமாதம் அபரபக்க துவாதசி, 27.08.2008 புதன்கிழமை)

ஏபுநேசர்,
[illegible] வீதி,
நாயன்மார்கட்டு.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூச்சிகளை உணவாகக் கொள்ளும் தாவரங்கள்



பூச்சிகளை உணவாகக் கொள்ளும் மூன்று வகையான தாவரங்கள் இருப்ப தாகக் கூறப்படுகின்றது. மாமிச உண்ணி களான மிருகங்கள் போன்று இந்தத் தாவரங்களும் குரூரமானவையாகவும் திறமையாக தம் உணவைத் தேடிக் கொள்பவையாகவும் உள்ளன.

இவைகளில் பலரும் அறிந்த தாவரம் பிச்சர் பிளான்ற் (*Pitcher plant*) என்று அழைக்கப்படும் குடம் அல்லது கூஜா போன்ற உறுப்புகளைக் கொண்ட தாவர மாகும். இலங்கைக் காடுகளில் காணப் படும் ஒருவகைக் கொடிகள் மூடியுடன் கூடிய கூஜா போன்ற அமைப்பு கொண்ட பூக்களைக் கொண்டிருக்கின்றன. இம் மாதிரி தாவரங்கள் மிக இனிப்பான ஒருவகைத் திரவத்தை வெளிப்படுத்து கின்றன. இத்திரவம் பூச்சிகளைக் கவர்ந்தி ழுக்கின்றன. கூஜா போன்ற அமைப்புக்கு சிவந்த நிறத்தில் விளிம்பும் உண்டு. இதைக் காணும் சிறு பிராணிகள் அங்கு என்ன இருக்கிறது என்று பார்க்க வருகின்றன. உள்ளே இருக்கும் தேனை அருந்த முனை கின்றன. கூஜாவின் உட்புறம் மிருதுவாக வும் வழுக்கும் தன்மையும் கொண்டிருப்ப தால் பிராணிகள் வழுக்கி உள்ளே விழுந்து விடுகின்றன. பிறகு வெளியே வரவே முடியாமல் இறந்து விடுகின்றன. உள்ளே இருக்கும் ஒருவகைத் திரவம் உடனே வேலை செய்கின்றது. பூச்சி ஜீரணிக்கப் படுகின்றது. தாவரத்துக்கு உணவு கிடைத்து விடுகிறது.

சண்டியு (*Sundew*) - சூரிய பனித்துளி என்பது இன்னொரு வகைத் தாவரம். இதுவும் தந்திரமாகத் தன் இரையைத் தோடிக்கொள்கின்றது. இதன் இலை களின் மேற் பகுதியில் மயிர் போன்ற இழைகள் காணப்படும். இவை தடிப்பான ஒருவகை பிசினை வெளிப்படுத்தும். இது பூச்சிக ளைக் கவர்ந்திழுக்கும். இந்தப் பிசின் பனித்துளிகள் போன்று காணப்படும். அதனால் தான் அதன் பெயர் பனித்துளி அமைகின்றது. இந்த மயிர் போன்ற இழையை பூச்சிகள் தொட்டால் போதும் - அதில் ஒட்டிக் கொண்டுவிடும். அதோடு முடியாது. ஏனைய இழைகளும் இலையின் நடுப்பக்கமாகச் சரிந்து பூச்சியை மடக்கி உள்ளே அமுக்கிவிடும். அதன்பின் அகப் பட்ட பூச்சியைச் சுற்றி வெளிவரும் திரவம் அதனை ஜீரணித்து விடும். ஜீர ணிப்பு முடிந்த பின் - சில சமயம் இரண்டு நாள்களில் மயிர்போன்ற இழைகள் மீண் டும் நேராக நிமிர்ந்து கொள்ளும்.

வடக்கு-தெற்கு கரோகலினாவில் ஒரு வகைத்தாவரம் உண்டு. அதற்குப் பெயர் வீனஸ் பிலைரெப் (*Venus flytrap*) சுக்கிர கொசுப்பொறி என்பது அதற்குப் பெயர். இதுவும் மிகத்தந்திரமாக இரை யைத் தேடிக்கொள்வதைக் காணலாம்.

தன் இலைகளையெல்லாம் விரித்து விட்டுக்கொண்டு அப்படியே இருக்கும் இந்தக்கொடி ஒரு இலையான் அல்லது கொசு இலையின் மீது பட்டால் போதும் பட்டென பொறிபோல மூடிக் கொண்டு விடும்.

செடியிலுள்ள திரவங்களால் இரை ஜீரணிக்கப்பட்டதன் பின் இலை விரிந்து கொள்ளும்.

ரங்கன்

# குதிரை வடிவில் மீனினம்



கடற்குதிரை (*Seahorse*) என்பது ஓர் மீன் இனமாகும். இது கரீபியன் கடல், பசு பிக்கடல் போன்றவற்றிலும் இந்து சமுத்திரக் கடலின் சில பகுதிகளிலும் வாழும் ஓர் மீனினமாகும். இது கூடு தலாக பவளப் பாறைகளி லேயே வாழும்.

இதன் இனப்பெருக்கம் பற்றி கூறுவதாயின், இது ஆண்கடற்குதிரை, பெண் கடற்குதிரை என இரு இனங்களில் உள்ளன.. இங்கு இனப்பெருக்கம் செய்வது ஆண் கடற்குதிரையாகும். இந்த ஆண் கடற்குதிரையின் வயிற்றில் ஒரு பை உள்ளது. இதற்குள் அது முட்டையிடும். பிறகு பவளப்பாறைகள் உள்ள இடத்தில் இருந்து தனது முட்டைகளை பராமரிக்கும். முட்டைகளில் இருந்து

## புதன் பொய்கை

குஞ்சு பொரிக்கும் போது பவளப்பாறைகள் இருக்கும் பகுதியில் உள்ள நீர் சூடாக இருக்கும்.

இந்த கடற்குதிரையின் குஞ்சுக்கு பெண் கடற் குதிரையே உணவு தேடிக்கொண்டு வந்து கொடுக்கும்.

இந்த கடற்குதிரைகள் வெளிநாட்டில் மனித உணவாக எடுக்கப்படுகின்றன.

மற்றும் சீனாவில் சில மருந்துகளில் சேர்க்கப்படுகின்றன.

இதனால் வெளிநாடுகளில் 10-15 வரையான கடற்குதிரைகள் தினமும் அழிக்கப்படுகின்றன.

செ.நிருஜன்,
நீர்வேலி வடக்கு.

# ஓரம் கட்டிக் கொண்டனர்

நெறிமுறையாக வாழ்ந்த இடம்
சிறப்புடனே மிளிர்ந்த குடும்பங்கள்
வறியோராகிவிட்டால் வசைபாடி
காறித் துப்புவோர் அனேகர்
தூற்றுவோர் கனபேர்-சுயநலனுடன்
பிறந்த மனைவிட்டு
பிறஇடம் சென்று தம்மை
பெரியவராகக் கணித்திடவென
பிரயத்தனங்கள் செய்து
மாடிமனை கொண்ட இடத்தை
தேடிச் சென்றனர்
இலட்சியங்கள் கொள்கைகளில்லா
இலட்சாதிபதிகளை நாடினர்
இறக்குமதியான வாகனத்தை
பிரியமுடன் வாங்கினர்
கோபுரங்களுடன் கூடிய
கோயில்களுக்கு ஓடினர்
வறியோரைப்புறம் தள்ளினர்- தம்
உறவில்லையென உண்மையை
மறைத்துக் கொண்டனர்-
ஏழையிடம்
குற்றங்கள் பலதைச் சுமத்தினர்
தரம் குறைந்தவரெனக் கணித்து
ஓரம் கட்டிக் கொண்டனர்

கண. கிருஷ்ணராஜன்

# அழகு மிளிரும் கோழி..... வான்கோழி!

சீனாக்கோழி என அழைக்கப்படும் வான்கோழியை ஆங்கிலத்தில் டர்க்கி என அழைக்கிறார்கள்.

இந்த வான்கோழியின் பூர்வீகம் அமெரிக்கா. அங்கிருந்து 16 ஆம் நூற்றாண்டில் மாலுமிகள் மூலம் ஸ்பெயின் நாட்டிற்கு சென்றது. பின்னர் கனடாவில் வாழ்ந்து ஐரோப்பிய நாடுகள் முழுவதும் பரவி வளர்ந்தது.

வான்கோழி பொதுவாக 23 கிலோ எடையுடையதாக இருக்கும். ஆண் பறவையின் வால் பகுதி விசிறிபோல அழகாக விரிந்து சுருங்கும் தன்மையுடையது.

இப்பறவையின் கழுத்துப் பகுதியில் தொங்கிக் கொண்டிருக்கும் பை போன்ற உறுப்பு அவற்றின் மனநிலைக்கு ஏற்ப சிவப்பு, நீலம், வெள்ளை என நிறம் மாறும்.

வான்கோழி இனங்களில் ஆண்களை பெண்களே மயக்கி சேர்க்கைக்கு அழைக்கின்றன. சேர்க்கை முடிந்த சில நாள்களில் பெண் வான்கோழி சாம்பல் கலந்த வெளிர்பச்சை நிறத்தில் 20 முதல் 30 வரை முட்டைகள் இட்டு அடைகாக்கின்றன. ஒரு நேரத்தில் குஞ்சுகள் பொரித்து வெளிவரு கின்றன.

வான்கோழிகளின் குரல் கேட்க அருவருப்பானதாக இருக்கும்.

விதூஷகி - நாவற்குளி.

# பாதுகாப்பு

கதவும் மூடியபடியே
ஜன்னலும் மூடியபடியே
திருட்டுப் போனதுதான்
எப்படியோ - திருட்டுப் போனதே
கதவும் ஜன்னலும் தான்

வி.முகிலன்,நெடுந்தீவு - 13

# பறக்கும் ஆசை



கி.மு. 2250 ஆண்டுகளுக்கு முன் சீன தேசத்தில் 'ஷன்' என்ற பெயருடைய மன்னர் ஒருவர் இருந்தார்.

இவருக்குத் திடீரென ஓர் ஆசை ஏற்பட்டது. பறவைகள் எல்லாம் வானத் தில் எவ்வளவு குஷியாகப் பறந்து திரிகின்றன. அவைகளைப் போல் தானும் பறக்க வேண்டும் என்ற ஆசைதான் அது. ஆனால் எப்படி முடியும் என்று தான்அவனுக்குப் புரியவில்லை.

தனது ஆசையை சபையில் முன் வைத்தான். அங்கிருந்த ஒரு மந்திரி ஆலோசனை ஒன்றை முன்வைத்தார். ஜமக்காளங்களைப் பயன்படுத்தி குதித்துப் பறந்து பார்த்தால் என்ன என்று கேட்டான்.

அந்த ஆலோசனையை ஏற்றுக் கொண்ட மன்னன் அரண்மனையின் உயரமான கோபுரம் ஒன்றின் மீது ஏறி ஜமக்காளங்களைக் கொண்டு தயாரிக் கப்பட்ட குடை போன்ற சாதனத்தைப் பயன்படுத்திக் கொண்டு கீழே குதித்தான்.

என்ன அதிசயம் அந்த சாதனம் சிறுகாயம் கூட ஏற்படாமல் அவனைத் தரையில் கொண்டு சேர்த்துவிட்டது.

ஷான் மன்னனுடைய அந்தக் குடையை முன்மாதிரியாகக் கொண்டுதான் பரசூட் தயாரிக்கப்பட்டதாம்.

சந்தோஷன் - குப்பிளான்.

# சதுரங்களுக்குள் ஒரு விளையாட்டு



சதுரங்க விளையாட்டு என்பது இன்று மிகப் பிரபலமானதாகக் காணப் படுகின்றது. பாடசாலைகளில் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப் படுகின்றன.

இந்த சதுரங்கத்தைக் கண்டுபிடித்தவர் ஓர் அந்தணர் என்று கூறப்படு கின்றது.

சதுரங்க விளையாட்டைக் கண்டு பிடித்த அந்தணருக்கு பரிசு கொடுக்க மன்னன் விரும்பினாராம். உங்களுக்கு என்ன பரிசில் வேண்டும் என அவரிடமே வினவினார். அவர் கேட்ட பதில் மன்னருக்குப் பெரும் ஆச்சரி யத்தை ஏற்படுத்தியது.

அவர் என்ன கேட்டார் தெரியுமா?

சதுரங்கப் பலகையில் இருக்கும் ஒவ் வொரு சதுரங்களுக்கும் கோதுமை மணிகள் தரவேண்டும் என்பதே அது. இது மன்னருக்கு மிக அற்பமானதாகத் தோன்றியது. ஆனால் அவர் அதன் பின் சிக்கலான ஓர் விடயத்தை யும் கூறினார்.

முதல் சதுரத்திற்கு ஒரு கோதுமை மணி தான் தரவேண்டும். ஆனால் அதற்கு அடுத் துள்ள ஒவ்வொரு சதுரத்திற்கும் அது இரட் டிப்பாகிக் கொண்டே செல்ல வேண்டும். அந்தக் கோதுமை மணிகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 18, 446, 744, 073, 709, 551, 615 ஆகும். அவர் கேட்ட பரிசிலை சாதா [illegible] பிரமித்துப் போனார்.

ஆனாலும் இது ஓர் கதை மட்டுமே. எனவே சதுரங்கம் தோன்றிய உண்மையான வரலாற்றையோ காலத்தையோ அறிய முடியவில்லை.

சதுரங்கம் பற்றிய இன்னுமொரு வரலாற்றுக் கதையும் உண்டு. 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாரசீக, தாஜிக் கவிஞரான ஃபிர்தௌசி தான் எழுதிய 'ஷாநாமா' என்ற காவியத் தில் சதுரங்கம் குறித்த ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுள்ளார். காவ், தால்கண்ட் என்ற இரு சகோதரர்கள் சிம்மாசனத் திற்காகப் போரிட்டனர். தால்கண்டின் படை தோற்கடிக் கப்பட்டது. தால்கண்ட் யானை மீது இருந்தபடியே உயிரை விட்டான்.

தனது இளைய மகனின் மரணச் செய்தி கேட்ட ராணி தம்பியைக் கொன்றதாகக் காவ் மீது குற்றம் சுமத்தினாள்.

தான் தனது தம்பியைச் சண்டையில் கொல்லவில்லை என்பதை நிரூபிக்கவும், அன்னைக்கு ஆறுதல் கூறுவதற் காகவும்நாட்டிலிருந்த சகலஅறிஞர்களையும்சபைக்கழைத்தான்.

அதில் ஒரு மாமேதை சதுரமான ஒரு பலகையில் தந்தத்தால் செய்யப்பட்ட வீரர் உருவங்களை வைத்தார். தளபதி, மன்னர் போன்றோரின் உருவங்களைக் கொண்டு சண்டை நடைபெற்ற விதத்தையும் அதில் படையினர் அழிந்த விதத்தையும் விளக்கினார். அதுவே சதுரங்கமாக உரு வெடுத்ததாகக் கூறப்படுகின்றது.

பூவிழி,யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடாநாட்டில் அரிதாகக் கிடைக்கும்

# விலங்குப் புரதத்தை ஈடு செய்யும் வகையில் புரத உணவுப் பயிர்களின் உற்பத்தி அவசியம்

## அறிவுறுத்துகின்றார் விவசாயப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஒக.27

கடல் உணவு தட்டுப் பாடாக உள்ளதால் குடாநாட்டு மக்களுக்கு விலங்குப் புரதம் கிடைப்பது அரிதாகவுள்ளது. இதனை நிவர்த்தி செய்யத் தாவரப் புரதத்தை மக்கள் அதிகளவில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

எனவே குடாநாட்டு மக்கள் தரிசாக உள்ள நிலங்களில் புரத உணவுகளைப் பெறக் கூடிய பயிர்களை உற்பத்தி செய்ய வேண்டும். நெல் அறுவடையின் பின் அந்த நிலைத்திலும் பயிர் உற்பத்தியை மேற்கொள்ள வேண்டும் என யாழ்.மாவட்ட பிரதி விவசாய விரிவாக்கப் பணிப்பாளர் சி.சிவகுமார் பொதுமக்களுக்கு அறிவுத்துகின்றார்.

யாழ்.மாவட்டத்தின் தற்போதைய போஷாக்கு நிலைவரம் குறித்தும் இது தொடர்பாக விவசாயத் திணைக்களம் எடுக்கும் கவனம் குறித்தும் கேட்டபோதே பிரதிப் பணிப்பாளர் மேற்கண்ட அறிவுறுத்தலைத் தெரிவித்தார்.

புரதம் பயிர்களை உற்பத்தி செய்தலின் அவசியம் குறித்தும் நாம் மேற்கொள்ளக் கூடிய விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்தும் அவர் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்:

தொழில்நுட்பங்களை உள்ளடக்கியதான உற்பத்தியின் ஊடாக பெருமளவு நிதி வெளி மாவட்டத்திற்கும் போக்குவரத்துக்கும் செலவாவதைத் தடுக்கலாம். தற்போதைய விலையிலும் பார்க்க குறைந்த விலையில் நுகர்ச்சியாளர்களுக்குப் புரதத் தேவையை வழங்க முடியும்.

அவரைப் பயிர்ச் செய்கையிலும் விவசாயிகள் ஈடுபடுவதன் மூலம் பொருளாதார ரீதியில் மாவட்டம் முன்னேறுவதுடன் தரமான போசணையையும் வழங்க முடியும். இதனூடாக விலங்குகளுக்கான அடர்வுதீன் வழங்கக் கூடியதாக இருக்கும் என்பதால் வெளி மாவட்டத்தில் இருந்து அவற்றை எதிர்பார்க்க வேண்டிய தேவை இராது.

உணவுஉற்பத்தியைப்பொறுத்த வரை உலகளாவிய நிலையில் வீழ்ச்சி தென்படுகிறது இது மேலும் நீடிக்கலாம் என ஆய்வுகள் கூறுகிறது.

### மாற்று உணவுப் பயிர்ச் செய்கை அவசியம்

இந்த நிலையில் எமது குடாநாட்டு விவசாயச் செய்கையில் மாற்றம் தேவை. நாம் எமது பாரம்பரிய தானியச் செய்கையில் கவனம் செலுத்த வேண்டும். அரிசி, கோதுமை மாவிற்கு மாற்றீடாக தானியங்களைப் பயிரிட்டு எமது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யலாம்.

சோளன், குரக்கன், சாமை, திணைப்பயிர்களை உற்பத்தி செய்யலாம். சோளன் பயிர்களை ¼ ஏக்கர் உற்பத்திச் செலவாக ரூபா 20 ஆயிரம் செலவு செய்து நிகர லாபமாக ரூபா 42 ஆயிரம் வரை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

மிளகாய் வெங்காயம் போன்ற பணப்பயிர்களுக்கு மாற்றீடாக சோளச் செய்கையை மேற் கொண்டு கூடிய வருமானத்தைப் பெறக் கூடியதாக இருக்கும். சோளச் செய்கை குறித்த விளக்கங்கள் விவசாயிகள் பெறக்கூடியதான ஒழுங்குகள் செய்யப்பட்டுள் என. சோளச் செய்கை விஸ்தரிப்பினூடாக கால்நடைத் தீவனத்திற் கான மூலப் பொருளும் கிடைக்கி றது.

நவீன தொழில்நுட்ப முறையிலான உற்பத்திகளூடாக மக்களின் சுகநல வாழ்வுக்குகந்த - போஷணை நிறைந்த உணவு உற்பத்தியின் மூலம் குடாநாட்டு மக்கள் தம்மை வளர்ப்படுத்திக் கொள்வது காலத்தின் தேவையாகும்.

நம்பி.



சோளப் பயிர்ச்செய்கை

## தேர்த் திருவிழா தினத்தன்று காலை 9 மணி தொடக்கம் அன்னதானம்

நல்லூர், ஒக.27

நல்லூர் கந்தசுவாமி ஆலய தேர்த்திருவிழா தினத்தன்று துர்க்கா மணி மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் அன்னதானம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளன.

நல்லை ஆதீனம் உட்பட அன்றைய தினம் ஆலயச் சூழலில் ஐந்து இடங்களில் அன்னதானம் வழங்கப்படவுள்ளது.

நல்லூர் அறுபத்து மூன்று நாயன்மார் மடத்தில் வியாழக்கிழமை சப்பறத் திருவிழா தொடக்கம் தீர்த்தத் திருவிழா வரையும் யாழ்.மாநகராட்சி மன்ற இந்து விடுதியில் நீர் வேலைப்பகுதியில் தேர், தீர்த்தத் திருவிழா நாள்களிலும் மற்றும் மூத்ததம்பி மடத்திலும் அன்னதானம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் என. (203-111)

## நல்லூர் தேர்த்திருவிழாவை முன்னிட்டு நயினாதீவில் இருந்து பஜனை பாதயாத்திரை

நல்லூர், ஒக.27

நல்லூர் தேர்த்திருவிழாவை முன்னிட்டு நயினாதீவில் இருந்து நல்லூருக்குத் திருத்தலப் பஜனை பாத யாத்திரை ஒன்று இன்று புதன்கிழமை காலை நயினை நாக பூசணி அம்பாள் ஆலயத்தில் அபிஷேக பூசை வழிபாட்டின் பின்னர் ஆரம்பமாகவுள்ளது.

குறிகட்டுவான், புங்குடுதீவு, வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு, பண்ணை, வில்லூன்றி, கந்தர் மடம் வழியாக பாதயாத்திரை தேர்த்திருவிழாவன்று ஆலயத்தை வந்தடையும்.

இன்று புதன்கிழமை குறிகட்டுவான் மனோன்மணி அம்மன் ஆலயம், புங்குடுதீவு சர்வோதயம் சிவயோக சுவாமிகள் தியான மண்டபம், முத்துமாரி அம்பாள் ஆலயம் என்பவற்றில் கூட்டுப் பிரார்த்தனைகள் இடம்பெறும். நண்பகல் புங்குடுதீவு பெருங்காடு மூத்த நயினார் ஆலயத்திலும் மாலை தென் பெருந்துறை சிவன் ஆலய ஆதீனவைரவர் ஆலயத்திலும் இரவு கிராஞ்சி மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திலும் பஜனை இடம்பெறும்.

நாளை வியாழக்கிழமை அதிகாலை 4 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு கிராஞ்சி முருகன் ஆலயம், கலட்டி சித்தி விநாயகர் ஆலயம், மடத்துவெளி முருகன், விநாயகர் ஆலயங்கள், வேலணை துறையூர் முருகன் ஐயனார் ஆலயங்கள் என்பவற்றில் பிரார்த்தனைகள் இடம்பெறும். தொடர்ந்து வங்களாவடி முருகன் ஆலயத்தில் கந்தர் அநுபூதி முற்றோதலும் மகேஸ்வரபூசையும் இடம் பெறும். அங்கிருந்து அதிசய வைரவர் ஆலயம், மண்கும்பான் விநாயகர் ஆலயம், யாழ்.சத்திரம் ஞானவைரவர் ஆலயம், கோட்டை பாலஞான வைரவர் ஆலயம், நாவாந்துறை வைரவர் ஆலயம், நாகபூசணி அம்பாள் ஆலயம் ஆகியவற்றுக்கு பாத்யாத்திரை சென்றது அன்றிரவு வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் பஜனை இடம்பெறும்.

நாளை மறுதினம் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழா தினத்தன்று அதிகாலை அங்கிருந்து புறப்பட்டு சீனிவாசகம் வீதி வழியாக வண்ணை சிவன், காளியம்பாள், பெருமாள் கோயில் வழியாக கந்தர்மடம் சிவ உதயநாக பூசணி அம்பாள் ஆலயத்தில் பூசை வழிபாடுகள் இடம் பெறும்.

அரசடி வீதி வழியாக நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தை சென்றடைந்து பின்னர் ஆலயத் திருத்தேரின் பின் திருவீதி பஜனை இடம்பெறும். பின்னர் [illegible] நிறைவடையும். (203)




# நல்லூர்ப் பெருந்திருவிழா பக்திப்பாக்கள்

நல்லூர் வெளியிலே பொ துநடம் புரிகிறான்
நங்கள்குரு நாதன் எங்கும் பிரகாசன்
எல்லாரை யுந்தன் னிடத்திலே காண்பவன்
இமய நியமங்களில் எள்ளளவு மோபிசகான்

- யோகர் சுவாமிகள்.

## மையம் - நல்லூர்

(காவடிச் சிந்து)

ஓங்கியுயர் கோபுரங்கள் சூழநிமிர் வேலவனின்
ஒப்பரிய நல்லைநகர்க் கோயில் - அதன்
உச்சியிலே கூவுமொரு சேவல் - வடி
வேலும்முகம் ஆறும்திருநீறும் மயில் வாகனமும்
வீரவர லாறுகளும் கூறு - படை
வீடுகளை நாடு,மலை ஏறு!

மாங்கனியை வேண்டிஉல கேழும்நொடிப் போதில்வலம்
வந்தமுரு கையனைக் கொண் டாடு - குற
வள்ளிதெய்வ யானைபதம் சூடு! - எங்கள்
வாழ்வும் பயில்ஊரும் திருநாடும் வளம்யாவும் தரும்
வள்ளல் முருகேசன் நல்லூர் சென்று - கோயில்
வாசலிலே நில்கதி நீ என்று!

தீங்கரும்பும் பால்தயிரும் வாழைபலா எள்,கடலை
தேனும்அவன் சேவடியில் வைத்து - குறை
தீர்முருகா என்றழு, த வித்து - அங்கு
சேருமடி யார்களொடு தாளமிடு பாடு வினை
தீயில் விழு பஞ்செனவே வேகும் - நீ
தேவர் நிலை எய்தல் எளி தாகும்!

நாங்கள்புரி பூசனைகள் நேர்கடன்கள் காவடிகள்
நல்லைமுரு கையன்உவந் தேற்கும் - நம்பு
நம்மை அவன் கைவடிவேல் காக்கும்!
நாடுமலை காடுகடல் வானம்அவன் ஆளுகையில்
ஞாலம் அவன் ஆடும் அரங்காகும் - மையம்
நல்லைநகர்காண், துயரம் போகும்!

சோ- பத்மநாதன்

## புண்பட்ட நெஞ்சமதை புனிதமாய் வைத்த கோவே

வெண்பட்டுக் குடை நிழலில்
நின்வேல், வீதி வலம் வருகையிலே
என் கண்பட்ட உன் கழலிற்
கண்ணீரைச் சொரிந்தே னையா
புண்பட்ட நெஞ்சமதைப்
புனிதமாய் வைத்த கோவே
நின் மண்பட்ட என் மேனி
மாசற்றுத் திகழுதையா

த.கந்தசாமி, கொக்குவில்.

## பழனிக்குக் கொடை

இதயம் என்னும் கோயிலிலே வீற்றிருக்கும் வேலவனே
ஆண்டியான உன்கோலம் பழனிக்குக் கொடையப்பா
யாருமற்ற மலையினிலே வெற்றுடலும் அழகப்பா
கோபத்திலும் உன்னழகு கோடி கோடி கோடியப்பா
மாம்பழமும் உனக்கென்றே அண்ணனும் நீட்டுகின்றான்
அத்தனையும் நாம் தருவோம் ஆறிக் கோபம் வாருமையா
தாயாரும் கெஞ்சுகிறாள் தந்தையாரும் அழைக்கின்றார்
பக்தர்களும் வேண்டுகின்றோம் கோலம் பூண வாருமையா.

மலர் - சின்னையா.

## உன் அடி பணிந்தோம் நல்லூரின் நாயகனே!

அழகு மிகு சூழலிலே மயிலேறி வருவோனே
யாழ்ப்பாண நன்னிலத்தில் குடியிருக்கும் கோமகனே
வேதனைகள் சுமந்து நிற்கும் எங்கள் தமிழ் மக்களையே
விரைந்து வந்து காத்தருள்வாய் நல்லூரின் நாயகனே
உன்னப்பன் சிவன் எங்கே, அன்னையவள் உமைஎங்கே
காக்கும் கடமை கொண்ட மாமன்தான் ஏங்கு சென்றான்
கூட்டிவந்து காட்டிவிடு, கொடுமைகளைப் போக்கிவிடு
பாடியுந்தன் அடிபணிந்தோம் நல்லூரின் நாயகனே.

த.மனோகரன் - (கொழும்பு).

## வருவாய் மயில் மீதிலே!

என்றும் உன் அருளுக்காய் ஏங்கி நிற்கும்
என் உள்ளக் குறிப்பறியாயோ! முருகா!
என் வேதனைகள் அறியாயோ முருகா!
என்றும் மௌனம் தான் உன் மொழியா முருகா!
ஏங்கும் என்முன் ஏறுமயில் ஏறி வந்திடுவாய்
ஏழை எந்தன் துயர் போக்கிடுவாய்
ஏற்றமுடன் வாழ வழிகாட்டிடுவாய் முருகா
ஏமாற்றம் நீக்கி அருள்புரிய வருவாய் மயில் மீதிலே!

செ.முருகவேணி - (சண்டிலிப்பாய்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# உண்மையை அறியும் பார்வை மக்களுக்கு கிட்டாதவரை ஏமாற்றுதல்களும் தொடரும்

இலங்கையின் இனப்பிரச்சினை பெரும் உள்நாட்டு யுத்தமாக கோர வடிவம் எடுத்திருக்கின்றது.

யுத்த சந்நதம் கொண்டு நிற்கும் தென்னிலங்கை அரசு, தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து, அடிமைப்படுத்தி, தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு சூளுரைத்து - கங்கணம் கட்டி - ஆக்ரோஷமான போர் ஒன்றைத் தொடுத்திருக்கின்றது.

அந்த யுத்தத்தை ஒட்டி கொழும்பு அரசு நடத்தும் ஒரு தலைப்பட்சமான போர்ப் பிரசாரம் குறித்து தெற்கில் ஓர் அசாதாரண மௌனம் நீடிக்கின்றது. கருத்துகளைக் கூறி, உண்மைகளைத் தெளிவுபடுத்த வேண்டிய தரப்புகள், ஒரு பக்க பிரசாரத்துக்கு முழு அளவில் இடமளித்து, விட்டுக் கொடுத்து, அதீத அமைதி காக்கின்றன.

இத்தகைய மோச நிலைமை குறித்து தெற்கின் சில புத்திஜீவிகள் எச்சரிக்கை உணர்வுடன் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

இவ்விடயம குறித்துத் தமது கருத்துகளை ஆதங்கத்துடனும் விசனத்துடனும் சுட்டிக்காட்டியுள்ள பேராசிரியர் ஜயந்த செனிவிரத்ன, யுத்தத்தை ஒட்டிப் பல்வேறு விமர்சகர்கள் மற்றும் அறிஞர்களின் மேற்கோள்களையும் எடுத்தியம்பி உள்ளார்.

" நாட்டில் சமாதானமும் அமைதியும் நிலவுவதற்குத் தாம் வழங்க வேண்டிய பங்களிப்பையும் தங்களது பொறுப்பு மற்றும் கடமையையும் உணராது செயற்படுவதை வெகுஜன ஊடகங்கள் இன்று வழக்கப்படுத்திக் கொண்டுள்ளன.

நாட்டில் சிக்கலும் பிரச்சினையும் நிலவும் இச்சமயத்தில் அவற்றில் சம்பந்தப்பட்ட இரு தரப்புகளினதும் கருத்து வெளிப்பாடுகள் வெவ்வேறான கோணங்களில் எதிரும் புதிருமாக அமைவது வழமையானதே. ஆனால் இவ்விடயத்தில் நடுநிலையாக நின்று செயற்படவேண்டிய ஊடகங்கள் - சம்பந்தப்பட்ட இரு தரப்புகளினதும் நிலைப்பாடுகள் குறித்துப் பொறுப்புடன் விமர்சிக்க வேண்டிய ஊடகங்கள் - அதை விடுத்து, பக்கச் சார்பாக - குறிப்பிட்ட ஒரு தரப்பின் நிலைப்பாடுகளையும் கருத்துகளையும் நியாயப்படுத்தி, செய்தி வெளியிடவும், விமர்சிக்கவும் பழகிக் கொண்டுள்ளன. இன்று ஊடகங்கள் மத்தியில் இத்தகைய நிலைப்பாட்டுப் போக்கு தீவிரமடைந்துள்ளது. இந்தப் பின்புலத்தில் வன்னிக் களமுனையில் என்ன நடைபெறுகின்றது என்ற உண்மை தென்பகுதி மக்களை எட்டுவதில்லை. இவ்விடயத்தில் ஊடகங்கள் தமக்குத் தாமே சுய கட்டுப்பாடு விதித்துக்கொண்டு செயற்படும் போக்கே காணப்படுகின்றது." - என்று விசனம் தெரிவிக்கின்றார் பேராசிரியர் ஜயந்த செனிவரத்ன.

தாம் சார்ந்த தரப்புக்கு எதிர்த்தரப்பான பிரிவு குறித்து சின்னஞ்சிறு செய்தி ஒன்றைப் பிரசுரிப்பது கூட, தேசத்துரோக முத்திரை குத்தப்படும் நிலையை ஊடகங்களுக்கு ஏற்படுத்தும் சூழலே காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

வண.ஒகஸ்தீன் என்ற அறிஞர் 'யுத்தம் என்பது மனிதனுக்கு வழங்கும் தண்டனையாகக் கொள்ளத்தக்கது' என்று போருக்கு வரைவிலக்கணம் கூறியிருக்கின்றமையைச் சுட்டிக்காட்டும் அவர், அத்தகைய தண்டனை இலங்கைத் தீவின் சகலருக்கும் இன்று விதிக்கப்பட்டிருக்கின்ற உண்மையையும் வெளிப்படுத்துகின்றார்.

முழு இராச்சியமும் இன்று அரசு என்றாகிவிட்டது. அந்த அரசை ஓர் அணியே கைப்பற்றி நடத்தியும் வருகின்றது. அந்த அணியே நாட்டை நிர்வகிக்கின்றது. அந்த அரசியல் நிர்வாக அணிக்கு, தனது இருப்பை நிலைநிறுத்திக் கொள்வதற்கு யுத்தத்தை முன்னெடுப்பது அத்தியாவசியமாகின்றது என்ற உண்மையையும் பேராசிரியர் ஜயந்த செனிவிரத்ன பகிரங்கமாக அம்பலப்படுத்திப் போட்டுடைக்கின்றார்.

"யுத்தம் என்பது அரசியலை வேறொரு திசைக்கு மாற்றிச் செல்லும் தந்திரோபாயம்" - என்று யுத்த விமர்சகரான கிளாவூட் சேவிஸ் கூறியிருக்கும் கருத்து இங்கு - இலங்கைத் தீவில் - இன்று கனகச்சிதமாக பொருந்துவதும் கவனிக்கத்தக்கதாகும்.

"யுத்தம் என்பது ஆட்சியாளர்களுக்கு ஒரு விளையாட்டாகும். தமது இருப்பை நிலைநிறுத்திக் கொள்வதற்கு 'யுத்தம்' அவர்களுக்கு மிக அத்தியாவசியமானதாகும். நாட்டின் பொதுமக்களை வசீகரித்து, அவர்களின் மனங்களைத் தம்வசப்படுத்த ஆட்சியாளர்களுக்கு யுத்தம் ஓர் உத்தியாகும்" - என்று சிந்தனாவாதி ஷேலி அன்று கூறியவை, இன்று இலங்கை ஆட்சியாளர்களுக்கு அப்படியே அளவான தொப்பியாக அமைவதையும் பேராசிரியர் ஜயந்த செனிவிரத்ன நினைவுபடுத்தியிருக்கின்றார்.

"இன்று நாட்டில் நடக்கும் யுத்தம் தொடர்பாக முற்றும் முழுதாக ஒரு தரப்பினது கருத்துகளையே மக்களால் கேட்கவும், காணவும், கேள்விப்படவும் முடிகின்றது. இன்றைய யுத்தம் தொடர்பான செய்திகளை அரசின் தேசிய பாதுகாப்பு மையம் மட்டுமே வெளியிடுகின்றது. சர்வதேச வலைப் பின்னலில் கூட இதற்கான மாற்றுவழி பிறழ்ந்தே காணப்படுகின்றது. யுத்தம் தொடர்பான உண்மைச் செய்திகளைத் தெரிந்து கொள்வது என்பது இப்போது கல்லில் நார் உரிக்க முயல்வது போன்ற சிரமமான காரியம்.

"இன்றைய அரசு, இந்நாட்டு மக்கள் மீது தனது அரசியல் நிலைப்பாட்டை வலோற்காரமாகப் புகுத்திவிடுகின்றது. தென்பகுதிப் பொதுமக்களைத் தனது விருப்புக்கேற்ப அது திசைதிருப்பிக் கொள்கிறது. இதன் காரணமாக, அரசின் வெற்றி அண்மித்து வருகிறது என்று சிங்கள சமூகத்தினர் நம்புகின்றனர். இந்த நம்பிக்கை, யுத்த விருப்புணர்வுடன் காலத்தைக் கழிக்கும் நிலையை அவர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. அந்தளவுக்கு இந்நாட்டின் சிங்களப் பொதுமக்கள் தரப்பு மனோரீதியான குருட்டு சமுதாயம் ஒன்றாகக் காணப்படுகின்றது." - இப்படிக் கவலைப்படுகின்றார் மற்றொரு சிங்களப் பேராசிரியரான டெரன்ஸ் புரசிங்க.

இந்தக் குருட்டு சமுதாயத்துக்கு உண்மையைக் கண்டறியும் பார்வை கிடைக்கும்வரை அரசைக் கைப்பற்றியிருக்கும் அணியின் இருப்புக்கான இத்தகைய தந்திரோபாயத் திசை திருப்பல்களும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கும். அது திருந்தாது.

# மாகாண சபைகளுக்கான தேர்தல் வெற்றி அரசுக்கல்ல படையினருக்கே உரியதாம்

## ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க கூறுகிறார்

கொழும்பு, ஓக.27

"இருமாகாணசபைத் தேர்தல்களிலும் அரசை மக்கள் வெற்றியடையச் செய்யவில்லை. மாறாகப் படையினரையே வெற்றியடையச் செய்துள்ளனர். யுத்தம் என்ற போர்வையில் மக்களை அரசு ஏமாற்றிக்கொண்டிருக்கிறது. தற்போது கிடைத்துள்ள தேர்தல் வெற்றியானது இராணுவத்தினருக்கான வெற்றியே அன்றி அரசுக்குரியதல்ல"

- இவ்வாறுஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பு - 7 இல் அமைந்துள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டி லேயே சோமவன்ஸஅமரசிங்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

17ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதில் இழுத்தடிப்புக்களை மேற்கொண்டு வருகின்ற அரசுக்கு மட்டுமே நடந்துமுடிந்த தேர்தல்கள் நீதியானதும் சுதந்திரமான தாகவும் இருக்கின்றது. ஆனால் நாம் அதனை ஏற்றுக்கொள்ளப்போவதே இல்லை.

### அரச பயங்கரவாதம்

வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட நாள் முதலே ஜே.வி. பி. மீது அரசு தாக்குதலை நடத்தத் தொடங்கிவிட்டது. அரச பயங்கரவாதம் முழுமையாக கட்டவிழ்த்து விடப்பட்டது. எமது ஆதரவாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அவர்கள் இன்னும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். எமது அங்கத்தவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

நீதிமன்றங்களில் பொய்யான வழக்குகள்சோடிக்கப்பட்டன. இதற்கு மத்தியில் போலியான வாக்குறுதி களைக் கொடுத்தும் ஒரு சில பகுதிகளில் மக்கள் மிரட்டப்பட்டும் வாக்குகள் சேகரிக்கப்பட்டன. தேசத்தை மாற்றியமைப்போம் என்ற வகையில் எமது ஆரம்பகட்ட செயற்பாடுகளில் சிறிது பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால், ஜே.வி.பி. தோல்வியடைந்து விட்டது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வில்லை. எமது வெற்றியை அரசு பயங்கரவாதமும் அரசு பலமும் அதிகாரங்களும் தடுத்துவிட்டமையே உண்மையாகும் - என்றார். (அ)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவிஆலய ஆதரவுடன் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் நடத்தி வரும் தெய்வீக இசையரங்கில் இன்று திருமதி வாஸஸ்பதி ரஜீந்திரன் இசைக் கச்சேரி நிகழ்த்துவார்.

வயலின்-செல்வி பாக்கியலட்சுமி ரஜீந்திரன், மிருதங்கம்-ரி.வரோதயன், முகர்சிங்-எஸ்.விமல்சங்கர்.

* * *

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் பெருந்திருவிழாக் காலங்களில் நாவலர் மண்டபத்தில் நடத்தப்பட்டுவரும் ஆன்மீக நிகழ்வில் இன்று புதன்கிழமை 'இந்த சரீரம்நமக்குக் கிடைத்தது' என்னும் தலைப்பில் பிரம்மஸ்ரீ ப. சிவாநந்த சர்மா சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

தெல்லிப்பழை அண்ணமார் அறநெறிப் பாடசாலை, தெல்லிப்பளை தோதரகை அறநெறிப் பாடசாலை, கட்டுவன் சிவலோகபதி அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர் களின் கூட்டுப்பிரார்த்தனையும் இடம் பெறும்.

* * *

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு சைவமகா சபையின் ஏற்பாட்டில் நல்லூர் முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் பிரம்மஸ்ரீ நித்தியானந்த சர்மா நிகழ்த்திவரும் 'கந்தபுராணம்' தொடர் சொற்பொழிவில் இன்று பானுகோபன் யுத்தம், என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும். (203)

# ஓய்வூதியர் அட்டைகள் இன்று வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஓக.27

யாழ்.செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஓய்வூதியர்கள் நடமாடும் சேவையில் சமூகமளித்தவர்களின் விதவை, அனாதை ஓய்வூதிய இலக்க அட்டைகளை இன்று பி.ப. ஒரு மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற நடமாடும் சேவை யில் சமூகமளித்தவர்கள் சமர்ப்பித்த விவரங்களைக் அட்டைகளைப் பூர்த்தி செய்யும் பணிகள் இடம் பெற்று வருகின்றன என்றும்-

இன்று ந.ப. ஒரு மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் வைத்து பூர்த்தி செய்யப்பட்ட அட்டைகள் வழங்கப்படும் என்றும்- செயலக ஓய்வூதிய பணிப்பாளர் (நிதி) க.கமலேஸ்வரன் தெரிவித்தார். (1)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 12 | 28.08.2008 |
| | வியாழக்கிழமை |
| திதி: | திரயோதசி |
| | பி.இ. 04.55வரை |
| நட்சத்திரம் : | பூசம் |
| | பி.இ. 03.17 வரை |
| சுபநேரம் : | 07.35 - 09.05 |
| ராகுகாலம் : | [illegible] |

# 2004/2005 கல்வியாண்டு மாணவர்களின் பெறுபேற்று அறிக்கை வழங்கப்படவில்லை

## யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஓக.27

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட 2004/2005 ஆம் கல்வியாண்டுக்கான பொதுக்கலை மாணவர்களின் இறுதிப் பெறுபேற்று அறிக்கைகள் இதுவரை வழங்கப்படவில்லை எனக் கலைப் பீட மாணவர்ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்த மாணவர்களின் பரீட்சைகள் அனைத்தும் கடந்த ஜனவரி மாதம் முடிவடைந்தன. பரீட்சைப் பெறுபேறுகள் ஒவ்வொரு துறை ரீதியிலும் ஏற்கனவே வெளியிடப்பட்டிருந்தன. எனினும் அந்தப் பெறுபேற்று அறிக்கைகள் இதுவரை வழங்கப்படாமையால் மாணவர்கள் வேலை வாய்ப்புக்களுக்கு விண்ணப்பிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாகப் பல தடவைகள் உரிய தரப்புகளுக்குத் தெரியப்படுத்தியும் இதுவரை சாதகமான பதில் எதுவும் கிடைக் கவில்லை. அதேவேளை சிறப்புக்கலை மாணவர்களுக்கான பெறுபேற்று அறிக்கைகள் ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டன. இந்நிலையில்பொதுக்கலை மாணவர்களின் பெறுபேற்று அறிக்கைகளையும் விரைவில் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம்-என்றுள்ளது. (50)

# வடமராட்சியில் நாளை கண் சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம், ஓக.27

வடமராட்சி லயன்ஸ் கழகம் நடத்தும் கண் சிகிச்சை முகாம் நாளை வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடை பெறவுள்ளது.

கண் வைத்திய நிபுணர் எஸ்.குகதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இச் சிகிச்சை முகாமில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் 226 3302, 226 3206, 226 3236, ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு முன்கூட் டியே பதிவு செய்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

# விபத்துக்களில் சிக்கிப் படுகாயமடைந்த இருவர் வைத்தியசாலையில் அனுமதி

யாழ்ப்பாணம், ஓக.27

வீதி விபத்துக்களில் சிக்கி மோட்டார் சைக்கிள்களில் பயணித்த இருவர் காயமடைந்துள்ளனர்.

இச் சம்பவங்கள் கடந்த 25 ஆம் திக்தி இடம்பெற்றுள்ளன.

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் அவ்வழியே வந்த மிதிவண்டியுடன் மோதியதில் பாடசாலை மாணவன் ஒருவன் காயமடைந்தான்.

மந்துவில் கிழக்கில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் காயமடைந்த கந்தசாமி லோகநாதன் (வயது-16) என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை-

வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதி தடம் புரண்டதில் அதில் பயணித்தவர் தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்தார்.

மீசாலை மேற்கில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த ரீ. சுந்தரலிங்கம் (வயது- 55) என்பவர் காயமடைந்த நிலை யில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (50-207)

# 'வாழ்வுதனைத் தேடி' கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக.27

மு.ஆ.சுமனின் 'வாழ்வுதனைத் தேடி...' கவிதை நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு வல்வை சிதம்பராக் கல்லூரி விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிவகுரு வித்தியாசாலை அதிபர் எஸ்.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் கலந்து கொள்வார். (50-202)

# நெடுந்தீவுக்கான மின்சார விநியோகத்தை விஸ்தரிப்பதற்கு மேலும் ஒரு மின்பிறப்பாக்கி

யாழ்ப்பாணம், ஓக.27

நெடுந்தீவுக்கான மின்சார விநியோகச் சேவையை மேலும் விஸ்தரிப்பதற்கென மற்றொரு மின்பிறப்பாக்கி எடுத்துவரப்பட்டுள்ளது

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட நடவடிக்கைகளை அடுத்தே இந்த மின்பிறப்பாக்கி எடுத்துவரப்பட்டுள்ளது.

250 கே.வி.மின்வலுக் கொண்ட மின் பிறப்பாக்கியே எடுத்துவரப்பட்டுள்ளது.

இந்த மின்பிறப்பாக்கியைப் பொருத்தும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக் கப்பட்டுள்ளதாகவும் அந்தப் பணிகள் நிறைவடைந்ததும் நெடுந்தீவுக்கான மின் விநியோகம் மேலும் விஸ்தரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

# சனசமூக நிலைய கட்டடத் திறப்புவிழா

யாழ்ப்பாணம், ஓக.27

சங்கானை மேற்கு, வடலியடைப்பு சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத் திறப்புவிழா இன்று புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

திறப்புவிழாவில் வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் பு.சிவலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

வடலியடைப்பு, பதறானை சித்தி விநாயகர் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ சிவநித்தியானந்த சிவாச்சாரியார் ஆசியுரை வழங்குவார். (202-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய சேமிப்பு வங்கி வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சிகரமான நற்செய்தி!

NSB Happy SAVINGS

27.08.2008 (புதன்கிழமை) முதல் தேசிய சேமிப்பு வங்கியின் அனைத்து கிளைகளிலும் அதிகமான வட்டியுடன் கூடிய "குதூகல சேமிப்புக் கணக்கு" (Happy Savings Account) அறிமுகப்படுத்தப்படுகின்றது.

- 14.5% அதி கூடிய வட்டி
- 1 000 000/= பெறுமதியான ஆயுட் காப்புறுதி
- இலவச ATM அட்டை (பெறுவனவுகள், வைப்புக்கள், எவ்வித கழிவும் இல்லாமல்)
- கட்டுப்பாடற்ற மீளப்பெறுவனவுகள்
- குறைந்த பட்சமாக 1000/= வுடன் ஆரம்பிக்கலாம்
- 100% அரசாங்க உத்தரவாதம்

இது பற்றி நீங்கள் இருமுறை சிந்திக்கத் தேவையில்லை...
உடனே கணக்கை ஆரம்பியுங்கள்...
உயர் வட்டியையும் விஷேட வரப்பிரசாதங்களையும் பெற்றுக் கொள்ளுங்கள்!

NSB
தேசிய சேமிப்பு வங்கி
யாழ்ப்பாண கிளை.


சங்கானை பட்டின அபிவிருத்தி சபையின் வளர்ச்சிக்காக நடத்தப்பட்ட அதிஷ்டலாப சீட்டிழுப்பில் பரிசு பெற்ற இலக்கங்கள் - 24.08.2008

01. 1ST PRIZE - 3141
02. 2nd PRIZE - 3771
03. 3rd PRIZE - 3646

ஆறுதல் பரிசுகள்

| | |
|---|---|
| 01. 3042 | 06. 2360 |
| 02. 0768 | 07. 5722 |
| 03. 4056 | 08. 2642 |
| 04. 3220 | 09. 0618 |
| 05. 2057 | 10. 4067 |

(சி/554420)

## மரண அறிவித்தல்

### இலகுப்பிள்ளை சின்னையா தம்பிமுத்து

(ஓய்வுபெற்ற கணக்காளர், Land Development Dept.,Colombo)



ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இலகுப்பிள்ளை சின்னையா தம்பிமுத்து (25.08.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா-செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பையா-சின்னத் தங்கச்சி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக்கணவரும், சாவித்திரிதேவி(ஆங்கில ஆசிரியை, யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி), லோகநாதன்(முகாமையாளர், Global Rubber Industries, Colombo) , சாரதாதேவி, இராஜமனோகரன், இராஜமனோகரி(ஆங்கில ஆசிரியை, யா/வயாவிளான் ம.ம.வி) ஆகி யோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சந்திரகுமார் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம், யாழ்ப்பாணம்) அவர்களின் மாமனும், காலஞ்சென்ற அரியமணி, இராசமணி, மனோன்மணி, காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை, பாக்கியம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான மீனாட்சி, விசாலாட்சி, சுப்பிரமணியம், நீலாட்சி, கோபாலபிள்ளை, பசுபதி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2008) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஊரெழு கிழக்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொக்கணை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலைவாணி முன்பள்ளி ஒழுங்கை,
ஊரெழு கிழக்கு.

தகவல்:
பிள்ளைகள்.

(77433)

### கால்நடை வளர்ப்போர் கூட்டம்

சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கத்தின் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (202)

### கோழிக்குஞ்சு விற்பனை

சாவகச்சேரி கால் நடை வைத்தியர் அலுவலகத்தில்கலப்பினகோழிக் குஞ்சுகள் விற்பனை செய்யப்படுகின்றன.

கோழிக்குஞ்சுகள் தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

### சங்கத்தானையில் பால் கொள்வனவு நிலையம்

சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலகம் பால் கொள்வனவு நிலையம் ஒன்றை செப்ரெம்பர் முதலாம் திகதி தொடக்கம் சங்கத்தானை முருகமூர்த்தி கோயிலுக்கு அருகில் ஆரம்பிக்கவுள்ளது.

பால் உற்பத்தியாளர்களிடமிருந்து இந் நிலையத்தில் பால் கொள்வனவு [illegible] அறிவிக்கப்பட்டுள்ளது. (202-207)



யாழ்.போதனா வைத்தியசாலை
அருள்மிகு ஸ்ரீ சாமுண்டிகாதேவி சமேத
ஞானவைரவர் தேவஸ்தான
புனராவர்த்தன பிரதிஷ்டா அட்டபந்தன
மஹா கும்பாபிஷேகம் (27.08.2008 புதன்கிழமை)

பரமனை மதித்திடா பங்கை யாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமும்
பிரி தரு வடுகனைப் போற்றி செய்குவோம்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் கோயில் கொண்டருளி தம்மை வேண்டி வணங்குபவர்களின் நோய், பிணி தீர்த்து காவல் தெய்வமாக விளங்கும் ஞானவைரவப் பெருமானுக்கும் விநாயகர், சுப்பிரமணியர், நாகதம்பிரான், அம்மன், சனீஸ்வரன் ஆகிய மூர்த்திகளுக்கும் இன்று புனர்பூச நட்சத்திரமும் கூடிய விருச்சிய லக்கின சுப முகூர்த்த வேளையில் முற்பகல் 11.15-12.00 மணி வரை மஹாகும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

கும்பாபிஷேக கிரியைகள் சிவஸ்ரீ சோமசுந்தரக்குருக்கள் தலைமையில், சிவஸ்ரீ செ.வைரவநாதக்குருக்கள் பிரதம குருவாக இருந்து ஏனைய சிவாச்சாரியர்களுடன் நடத்தி வைக்கின்றனர்.

கும்பாபிஷேகத்தை ஒட்டிய கிரியைகள் முறையே நடைபெற்று வருகின்றன. எண்ணைக் காப்பு மூன்று தினங்கள் நடைபெற்றன.

வைத்தியசாலையில் ஆலயம் அமைந்திருப்பது தனிச்சிறப்பாகும். வைத்திய சேவை நாடிவரும் நோயாளர்கள், உறவினர்கள் இன, மத பேதமின்றி நம்பிக்கை வைத்து வணங்குவதும் தனிச்சிறப்பாகும்.

இந்த ஆலயத்தில் தினசரி இரு வேளைகள் பூசை நடைபெறுகிறது. வெள்ளிக்கிழமை கூட்டுப்பிரார்த்தனை வழிபாடும் ஒவ்வொரு மாதம் வரும் பரணி நட்சத்திரத்தில் பரணி பூசை திருவிழாவும் சுவாமி வீதியுலா வருவதும் நடைபெறும். நவராத்திரி, திருவெம்பா பூசை காலத்தில் பத்துத் தினங்கள் அலங்காரத் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறும். இவ்விழாக்களை வைத்தியசாலையின் சகல தரத்திலும் உள்ள ஊழியர்கள் செய்து வருகிறார்கள்.

ஆலய நிர்வாகத்தை வைத்தியசாலை நிர்வாகமும் ஊழியர்களும் இணைந்த அறங்காவலர் சபை நிர்வகித்து வருகிறது.

வைத்தியசாலை ஆலய திருப்பணிக்கு உதவிய அனைவருக்கும் ஆலய நிர்வாக சபை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

யாவரும் வைரவப் பெருமானின் திருவருள் பெற்றுச் சிறப்புற வாழ்வார்களாக.

ஆலய நிர்வாக சபையினர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

(77486)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## TECHNO PARK

- PC Sales & Repairing
- Game Zone
- Web Designing
- Web Hosting
- Net Working
- Soft ware
- Accessories are available

127/2, K.K.S. Road, Kokuvil Junction, Jaffna. (Infront of Kokuvil Hindu College)
Contacts 0715397108 0779235804


# மரண அறிவித்தல்கள்

## சிவசம்பு தியாகராஜா



அனலைதீவு, 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சிவசம்பு தியாகராஜா 23.08.2008 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் அமரர்களான சிவசம்பு-வள்ளியம்மை தம்பதியினரின் புதல்வரும், அமரர் சிவகுரு-ராசம்மா தம்பதியினரின் மருமகனும், சிவரூபராணி அவர்களின் அன்புக் கணவரும், ஜெகதீஸ்வரன், வாகினி, அகிலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சதீஸ்வரி, சதீசன் ஆகியோரின் மாமனாரும், பரமேஸ்வரி, புஸ்பமணி, கனகசபை ஆகியோரின் அருமைச் சகோதரரும், அமரர்களான இராசையா (ஆசிரியர்), கு.வி.தம்பித்துரை(கலைவாணி), கமலாம்பிகை ஆகியோரின் மைத்துனரும் மற்றும் கைலாசப்பிள்ளை, தர்மகுலநாதன், அதிரூபராணி, விமலா, உதயகுமாரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று (27.08.2008) புதன்கிழமை காலை 9மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (28.08.2008) வியாழக்கிழமை காலை 8மணிக்கு இறுதிக் கிரியைகள் இடம்பெற்று கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல 33, 5/3, 42வது ஒழுங்கை,
வெள்ளவத்தை,
கொழும்பு-06.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
T.P:0114572118, 0785816530.

## வேலுப்பிள்ளை முத்துலிங்கம் J.P

### இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்

(உரிமையாளர், தேவி அரிசி ஆலை, ஸ்ரீதேவி கொமினிக்கேசன்- அச்சுவேலி, ஸ்ரீதேவி கொமினிக்கேசன் - [illegible])

அச்சுவேலி வடக்கைப்பிறப்பிடமாகவும் அச்சுவேலி, இராசவீதிச் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை முத்துலிங்கம்(சமாதான நீதிவான்) நேற்று (26.08.2008) செவ்வாய்க் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ் சென்ற வேலுப்பிள்ளை-சின்னப்பிள்ளை தம்பதிகளின் ஆசை மகனும், தேவமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சபாபதி- கண்ணகை ஆகியோரின் அன்பு மருமகனும், ஸ்ரீசுயானி, ஸ்ரீசுசியந்தி, ஜெமிலா(பிரான்ஸ்), ஸ்ரீசுபீஸ்கரன்(லண்டன்), ஸ்ரீசுபாணு (வவுனியா), ஸ்ரீசுகிர்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீதேவராஜலிங்கம்(செல்வா படமாளிகை), மோகனதாஸ்(பிரான்ஸ்), சுதாகர்(பொறியியலாளர், வவுனியா), சுகிர்தா(லண்டன்), வாயினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், ஸ்ரீநிஷாந்தினி, டிரின்சி(பிரான்ஸ்), விதுஸ்ணன்(பிரான்ஸ்), இலக்கியா (பிரான்ஸ்), யஸ்மியன் (லண்டன்), யசின் (லண்டன்), நிதுஷன்(வவுனியா), நிதுசிகா (வவுனியா) ஆகியோரின் பாசமிகு பேரனும், செல்லப்பாக்கியம், திரவியம், சிவபாக்கியம்(குண்டுமணி), வன்னியசிங்கம் (லாலா) காலஞ்சென்ற மார்க்கண்டு ஆகியோரின் அன்பு அண்ணனும் காலஞ்சென்ற பரமகுரு (வைத்தியர்), அழகரத்தினம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், இராஜகுலசிங்கம்(சபாரதனி போட்டோஸ்), சபாஇரத்தினசிங்கம்(சபா பல்பொருள் வாணிபம்), யோகசிங்கம், (தேனுஜன் ரேடர்ஸ்), ஜெயகுலசிங்கம்(கனடா), இரஞ்சிதமலர் (திருகோணமலை), சந்திரமலர்(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம்பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இராசவீதிச் சந்தி,
அச்சுவேலி.

தகவல்:
திருமதி மு.தேவமலர் (மனைவி),
குடும்பத்தினர்.

## திருமதி லூர்துமேரி சின்னம்மா இராஜேந்திரம்



சூராவத்தை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லூர்துமேரி சின்னம்மா இராஜேந்திரம் 25.08.2008 திங்கட்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜேந்திரத்தின் (பொலிஸ்) பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னையா- சின்னத்தங்கம் தம்பதியினரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான கபிரியேல்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், இராசம்மாவின் அன்புச் சகோதரியும், இம்மானுவேல்(ஜெயராசா), ஜெயானந்தம், ஜெயபாலன் (பாலன்), ஜெயரூபன் (ரூபன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிரேமராணி, ஜெசிந்தா, லில்லி ஆகியோரின் மாமியாரும், டினேஸ், சோபனா, ஜெனா, தீபன், டோனி, ஜீவன், றெனுஸ், றெஸ்மி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை(28.08.2008) வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு சூராவத்தை புனித திரேசாள் ஆலயத்தில் இடம்பெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக ஏழாலை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சூராவத்தை,
சுன்னாகம்.

தகவல்:
பிள்ளைகள்

## டிலான் பெரேராவிடமிருந்து நீதி அமைச்சை பறிக்க முடிவு?

கொழும்பு, ஓக. 27

நீதி அமைச்சர் பதவியிலிருந்து விலகுமாறு டிலான் பெரேராவுக்கு ஜனாதிபதி செயலகம் கடிதம் அனுப்பியிருப்பதாகத் தெரியவந்திருக்கிறது.

நீதி அமைச்சர் மற்றும் துறைமுக அபிவிருத்தி அமைச்சு ஆகிய இரு ப[illegible]விகளை வகிக்கிறார் டிலான் பெரேரா. நீதி அமைச்[illegible] எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் கைவி[illegible] விட்டு துறைமுக அமைச்சை மட்டும் வைத்திருக்குமாறு ஜனாதிபதி செயலகம் அவரைப் பணித்திருக்கிறது. அமைச்சர் ஒருவர் ஒரு அமைச்சுப் பொறுப்பை மாத்திரமே கொண்டிருக்க முடியும் என்ற ஜனாதிபதியின் அறிவுறுத்தலைச் சுட்டிக்காட்டி, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க இக்கடிதத்தை அனுப்பியுள்ளார்.

நீதி அமைச்சர் டிலான் பெரேராவுக்கும் அமைச்சின் செயலாளர் சுகத கம்லத்துக்கும் இடையில் நிலவும் கருத்து வேறுபாடுகள் காரணமாக அமைச்சுக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் - இந்த விடயம் குறித்து ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்தே டிலான் பெரேராவிடமிருந்து அமைச்சுப் பதவி பறிக்கப்படுவதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன.

## வடமராட்சி பிரதேச ஆசிரியர், அதிபர்களுக்கு

யாழ்ப்பாணம், ஓக 27

கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நாளை நடைபெறவுள்ள விதவைகள்/அநாதைகள் ஓய்வூதிய இலக்கம் வழங்குவதற்கான நடமாடும் சேவையில் இதுவரை வி.அ.ஓ.இலக்கம் பெற்றுக் கொள்ளாத வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்தை சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்களுக்கான வி.அ.ஓ. இலக்கம் பெற்றுக் கொள்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே குறித்த அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் திருமணச் சான்றிதழ் (மூலப் பிரதி) பிறப்புச் சாட்சிப்பத்திரம் போட்டோப்பிரதி (கணவன், மனைவி), தேசிய அடையாளஅட்டை போட்டோப்பிரதி (கணவன், மனைவி) ஆகியவற்றுடன் இன்று மு.ப. 9.00 மணிக்கு வலயக்கல்வி அலுவலகத்திற்கு வருகை தருமாறு வடமராட்சி வலயக்கல்விப்ப ணிப்பாளர் அறிவித் துள்ளார். (1)

## கண்ணீர் அஞ்சலி



கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை அதிபரும் எமது சக நண்பன் தெ.ஜெயகரன் அவர்களின் அன்புத் தந்தையுமான

**விநாயகமூர்த்தி தெய்வேந்திரமூர்த்தி**

அவர்களின் மறைவை யொட்டி துயரத்தில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

**2006 உயர்தர பிரிவு நண்பர்கள்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அதிபர்

**விநாயகமூர்த்தி தெய்வேந்திரமூர்த்தி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் குழாம்,
மாணவர்கள்,
[illegible]
G.T.M.S.

## குருத்துவப் பொன்விழா நன்றித் திருப்பலி



மிருசுவிலின் குருமைந்தன் அருட்பணி S.E.N.குணசீலன் அவர்கள் தன் மண்ணின் உறவுகளுடன் இணைந்து ஒப்புக் கொடுக்கும்நன்றித்திருப்பலியில் இணைந்திட இறைபணியாளர்களையும், பங்குமக்களையும், உறவினர், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இடம்:-** புனித மடுத்தினார் சிறிய குருமடம், பிரதான வீதி, [illegible]ழ்ப்பாணம்.
**காலம்:-** 30.08.2008 (சனிக்கிழமை) காலை 9.00 [illegible]ணி

**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.**
அருட்பணி J.நிக்கலஸ் (விழாக்குழு சார்பில்)

(77506)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை



அல்வாய் தெற்கு, அத்தாயை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை அவர்க[illegible] (25.08.2008) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் அமரர்களான சின்னத்தம்பி தம்பதிகளின் மகனும், வரணியைச் சேர்ந்த அமரர்களான கார்த்திகேசு தம்பதிகளின் அன்பு மருமகனும், யோகராணியின் அருமைக் கணவரும், தம்பிமுத்து, ஆறுமுகம் (அமரர்) கனகசபை, சரஸ்வதி (அமரர்), பால சௌந்தரி, ஆகியோரின் சகோதரனும் கணேசலிங்கம், கலாரூபன், கவிதாஸ், விமலதாஸ், சுகந்தி, றமணதாசன், சுமதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (27.08.2008) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று தெகிவளை - கல்கிசை பொதுமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

K/அல் பஹ்றியா மத்திய
கல்லூரி,
பாணந்துறை

(சி/554430)

தகவல்:
க.றமணதாசன்
(மகன்)

## திருமதி கயித்தான் இன்னேசியா



சென்ஜூட், இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கயித்தான் இன்னேசியா 25.08.2008 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாவிலு- சலோமை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான பர்ணாந்து ஆரோக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ் சென்ற கயித்தானின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சஞ்சோன், அன்ரனியேக்கப் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிறிஸ்ரின், ஜெயராணி (வவுனியா), வியாகுலமரியநாயகம், துரைராசா (லண்டன்), டொண்பொஸ்கோ, சதாசகாயராணி, கிறிஸ்துராசா (மட்டக்களப்பு), ஏணஸ் (பண்டத்தரிப்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கஸ்பார் (வவுனியா), வலன்ரீனா ஜெயராணி (நீர்கொழும்பு), லின்ரா, சிவஞானம், வாசுகி (மட்டக்களப்பு), கிருபா (பண்டத்தரிப்பு) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஜோன்சன் (லண்டன்), ஜென்சி (வவுனியா), றொபின்சன் (லண்டன்), பிறிற்றா, மெரினா, கில்ரன், சன்றின், சன்றா(நீர்கொழும்பு), யசோ, டிலா, றமன் (கட்டார்), றமீன், றெபேக்கா, டானியேல், சாரா (மட்டக்களப்பு), லொய்சாந், சர்மிக்கா, அமெண்டா (பண்டத்தரிப்பு) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அபிஷா, ஷெரோன் (நீர்கொழும்பு) ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் நாளை (28.08.2008), வியாழக்கிழமை மு.ப 10மணிக்கு புனித யூதாதேயு ஆலயத்தில் திருப்பலியுடன் நல்லடக்கம் சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சென்ஜூட்லேன்,
இளவாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

## சொக்கலிங்கம் சிவலிங்கம்

### (இளைப்பாறிய உத்தியோகத்தர், காணி அபிவிருத்தி இலாகா)

வட்டுக்கோட்டை, அரசடியை வசிப்பிடமாகக் கொண்ட சொக்கலிங்கம் சிவலிங்கம் (இளைப்பாறிய உத்தியோகத்தர், காணி அபிவிருத்தி இலாகா) 26.08.2008 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் புஸ்பவதியின் அன்புக் கணவரும், தயாபரன்(U.K) றஜனி, தயாளன், ராகினி, ஆனந்தராஜா, விக்னேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயதாஸ்(மோகன், யாழ்.P.S சேவிஸ் ஸ்ரேசன்), மேனகை (மஞ்சுளா), பத்மா (அபிவிருத்தி உத்தியோகத்தர், கைத்தொழில் திணைக்களம் யாழ்.கச்சேரி), ஆகியோரின் அன்பு மாமனாரும், பானுஜா (யாழ்ப்பாணக் கல்லூரி), பானுப்பிரியா, நிசாந்தன்(யாழ்ப்பாணக்கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (27.08.2008) புதன்கிழமை பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி வீதி,
வட்டு. தெற்கு,
வட்டுக்கோட்டை.

(77498)

தகவல்:
க.ஜெயதாஸ்(மோகன்,மருமகன்)
(யா/P.S சேவிஸ் ஸ்ரேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனோகணேசன் குற்றத்தடுப்பு பிரிவால் பலமணிநேரம் விசாரணை

கொழும்பு, ஓக 27

மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் நேற்று பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினருக்கு வாக்குமூலம் அளித்துள்ளார்.

பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவின் கோரிக்கையின் பேரில் நேற்று அவர்களது அலுவலகத்துக்குச் சென்ற கணேசனிடம் முற்பகல் 11மணிமுதல் மாலை 6மணிவரை வாக்குமூலம் பெறப்பட்டது. (அ-01)

## தண்ணீர்ப் பந்தலில் குளிர்பானம் குடித்த இருவர் மயக்கம்

யாழ்ப்பாணம், ஓக.27

நல்லூர் கந்தன் ஆலய உற்சவத்தை முன்னிட்டு அ[illegible]மக்கப்பட்ட தண்ணீர்ப் பந்தலில் கு[illegible]னம் அருந்திய இரு சிறுவர்கள் ம[illegible]ற்ற நிலையில் நேற்று யாழ். போத[illegible] வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அரியாலையை சேர்ந்த ரி.ஜனதீபன் (வயது - 12) யாழ்ப்பாணம் 4ஆம் குறுக்குத் தெருவை சேர்ந்த எஸ்.நிரோஜன் (வயது - 13) ஆகியோரே குளிர்பானம் அருந்தி மயக்கமுற்ற நிலையில் யாழ். சேர்க்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில்யாழ். மாநகரசபை பொதுசுகாதாரப்பரிசோதகர் விசாரணை மேற் கொண்டுள்ளார் எனவும் கூறப்படுகிறது.

## தென்மராட்சியில் தேடுதல்

தென்மராட்சியில், ஏ- 9 வீதியின் கிழக்குப் பகுதியில் நேற்றுக் காலை தேடுதல் நடவடிக்கை இடம்பெற்றது. சாவகச்சேரி சந்தையிலிருந்து கொடிகாமம் சந்தி வரை யான பிரதேசத்திலேயே தேடுதல் இடம்பெற்றது.

## சப்ரகமுவவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மாகாண சபைத் தேர்தலில் சப்ரகமுவ மாகாணத்திற்கு ஒரு தமிழ் உறுப்பினர் கூட தெரிவாகாமல் போனமை துரதிஷ்டவசமானதாகும்.

இந்த நிலைமைக்குப் பல காரணங்கள் உள்ளன. சுமார் 45 வீதமான தமிழ் வாக்காளர்கள் வாக்களிக்காமையே இதற்கு முதற் காரணம்.

அவர்களிடம் தேசிய அடையாள அட்டைகள் இல்லாமைதான் அவர்கள் வாக்களிக்காமைக்குக் காரணம். தற்காலிக அடையாள அட்டைகளைக் கூட கிராம சேவக[illegible] அம் மக்களுக்கு வழங்காமல் கிடப்பில் [illegible]னர்.

அதேபோல், தபால் நிலையங்களி[illegible] அடையாள அட்டைகள் தேங்கிக் கிடந்த[illegible]வற்றை உரியவர்களிடம் விநியோகிக்க ச[illegible]ந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வி[illegible]லை.

கடவுச் சீட்டுக்களைக் கொ[illegible]டு வாக்களிக்க முடியும் என்ற நிலைமை இருந்த போதும் அநேகமானவர்களின் கடவுச்சீட்டுக்கள் காலாவதியாகியிருந்தன.

அதேபோல் தமிழ் மக்களால் அளிக்கப்பட்ட வாக்குகளில் 22 ஆயிரம் வாக்குகள் நிராகரிக்கப்பட்டு விட்டன.

மேலும் கொழும்பில் தொழில்புரிகின்ற மற்றும் தங்கியிருக்கின்ற மலையகத்தவர்கள் வந்து வாக்களிக்கவில்லை.

மேற்படி காரணங்களாலேயே தமி[illegible]ப் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டது. அத[illegible]ல் எந்த வகையிலும் இலங்கைத் தொழி[illegible]ளர் காங்கிரஸிற்கான மக்களின் ஆதரவு குறையவில்லை. - என்றார். (அ-சி)

## பூநகரிப் பகுதியில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிச்சயமற்றதாகவும் காணப்படுகின்றது.

வன்னிக்குள் நிலக்கண்ணிவெடித் தாக்குதல்களும் விமானத்தாக்குதல்களும் இடம்பெறுகின்றன.

மல்லாவி அரச மருத்துவமனை தற்போது கிளிநொச்சி பொதுமருத்துவமனைக் கட்டடத்தில் இயங்குகின்றது.

அக்கராயன் மற்றும் வன்னேரி மருத்துவமனைகளிலிருந்து வெளியேற்றப்பட்ட அதன் 200ஊழியர்களைத் தங்கவைப்பதற்கான தங்குமிடங்கள் தேவையென சுகாதார அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேலும் இந்த மருத்துவமனைகளுக்கான 150 படுக்கைகளும் அவசியமாகவுள்ளன.

இந்த மருத்துவமனைகள் இடமாற்றப்பட்டதால் படுக்கைகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

பூநகரிப் பகுதியில் இடம்பெறும் ஷெல் தாக்குதல் மற்றும் அருகில் இடம்பெறும் மோதல்கள் காரணமாக முட்கொம்பன், அரசபுரம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்களும் வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

மேலும் மூவாயிரம் குடும்பங்கள் இடம்பெயரலாம் எனக் கிளிநொச்சிப் பிரதேச செயலகம் தெரிவிக்கின்றது. இவர்களில் ஏற்கனவே வேறு பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்தவர்களும் உள்ளனர்.

ஜூன் மாதத்திற்குப் பின்னர் 18 ஆயிரத்து 970 குடும்பங்களைச் சேர்ந்த 74 ஆயிரத்து 119 பேர் இடம்பெயர்ந்து கிளிநொச்சிக்குள் வந்துள்ளனர்.

கிளிநொச்சியில் தற்போது உள்ள இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 34 ஆயிரத்து 68 பேர் என செயலகம் தெரிவிக்கின்றது. இவர்கள் மாவட்டத்தில் உள்ள 22 பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சிக்கு மேல்திக மருத்துவப் பொருள்களை வழங்கவேண்டும் எனப் பிரதேச சுகாதார அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைகளுக்கான மாதாந்த எரிபொருள் விநியோகம் குறைக்கப்பட்டமை கவலைக்குரிய விடயமாகக் காணப்படுகின்றது.

ஓகஸ்ட் 21 ஆம் திகதி இடம்பெற்ற இடம்பெயர்ந்தோர் நிலைமை தொடர்பான கூட்டத்தில் பொது இடங்களிலும், திறந்த வெளிகளிலும் தங்கியுள்ள மக்களிற்கு 5,000 தற்காலிக தங்குமிடங்கள் தேவையென அரச அதிபர் தெரிவித்தார்.

இவற்றில் 1,700 தற்காலிக இருப்பிடங்களை ஏற்படுத்திக் கொடுக்க மனிதாபிமான அமைப்புகள் இணங்கியுள்ளன. இவற்றிற்கான இடங்களைத் தெரிவுசெய்யும் பணி இடம்பெறுகின்றது. கண்[illegible]ாவளையில் 187 ஏக்கர் இடம் இனங்கா[illegible]பட்டுள்ளது.

ஜூன் மாதத்திற்கு[illegible]பின்னர் பூநகரி, கரச்சி உதவி அரச அதிபர் பிரிவுகளிலிருந்து 33 பாடசாலைகளைச் சேர்ந்த 10 ஆயிரம் மாணவர்கள் இடம்பெயர்ந் துள்ளனர் - என்று உள்ளது. (அ-சி)

## சடலத்தை இனங்காணுமாறு பொலிஸார் கோரியுள்ளனர்

யாழ்ப்பாணம், ஓக. 27

குருநகர் இறங்குதுறைப் பகுதியில் நேற்று முன்தினம் கரை ஒதுங்கிய இளைஞனின் சடலத்தை இனங்காண உதவுமாறு யாழ். பொலிஸார் கேட்டுள்ளனர்.

முகம் சிதைந்த நிலையில் சடலம் காணப்படுவதால் வயதை மதிப்பிட முடியாதுள்ளது எனத்தெரிவித்த பொலிஸார் மரணமானவர் 5 அடி 6 அங்குலம் உயரமுடையவர் என்றும் கூறினர்.

சடலத்தில் சூட்டுக்காயங்கள் எவையும் காணப்படவில்லை என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## துணுக்காய்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையம் இதனை அறிவித்தது.

விடுதலைப் புலிகள் மேற் கொண்ட மோட்டார் தாக்குதலில் 4படையினரும் யோகபுரம் பகுதியில் இடம் பெற்ற மோத லில் ஒரு சிப்பாயும் கொல்லப்பட்டார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-01)

## கருணா குழுவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாமதிக்காது நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியை நேரில் சந்தித்துக் கோரவுள்ளோம்.'' - என்று மேற்படி சிறைகளுக்கான விஜயத்தின் பின்னர் இனியபாரதி தெரிவித்தார்.(உ)

## பொதுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் நட்த்தப்படலாம் என்ற ஊகங் கள் வெளியாகி வருகின்ற நேரத்தில் ஜனாதி பதி இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

"பொதுத் தேர்தலை நடத்தினால் அதில் அரசு மீண்டும் வெல்லும் என்பது உறுதியான விடயம். ஆனால் எமக்கு 2010ஆம் ஆண்டு வரைக்கும் மக்கள் ஆணை இருக்கும்போது - நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் இருக்கும் போது - பொதுத்தேர்தலை நடத்த வேண்டிய அவசியம் இப்போது இல்லை'' என்று ஜனாதிபதி கூறினார். ''அடிக்கடி தேர்தல்களை நடத்துவதால் பெருமளவு பணம் வீணாகிவிடும். இப்போது இருக்கும் நிலையில் வீண் செலவுகள் எதற்காக?'' என்றும் கேள்வி எழுப்பினாராம் ஜனாதிபதி.

## வன்னி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜேம்ஸ் பத்திநாதன் தலைமையில் இடம்பெற்றது.

கிளிநொச்சியிலுள்ள ஐ.நா. செயலகத்தை நோக்கி நகர்ந்த பேரணியின் முடிவில் ஐ.நா. செயலாளருக்கான மனுவை அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஆணையப் பிரதிநிதி யிடம் ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் கையளித்தார்.

## திருமலைக் கடற்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறைமுகப் பகுதிக்குள் திடீரெனப் புகுந்த புலிகளின் விமானங்கள், இரண்டு குண்டுகளை வீசின. அந்தக் குண்டுகள் கடற்படைத் துறைமுகப் பகுதிக்குள் விழுந்து பாரிய சத்தத்துடன் வெடித்தன. இதனைத் தொடர்ந்து கடற்படைத்துறை முகப் பகுதியில் பெரும் தீப்பிழம்பு தோன் றியது எனவும், அங்கு பெரும் புகைமூட் டம் எழுந்ததாகவும் தகவல்கள் தெரிவித்தன.

விமானத்தாக்குதல் நடந்தத்தப்பட்ட திருமலைத்துறைமுகம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் உடனடியாகவே மின்சாரம் துண்டிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்துக்கு இராணுவத்தினரை ஏற்றிச் செல்லப்பயன்படும் 'ஜெட்லைனர்' என்ற துருப்புக்காவிக் கப்பலை இலக்குவைத்தே தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இதில் நான்கு கடற்படையினர் உயிரிழந்ததுடன்,, 18 பேர் படுகாயமடைந்தனர் எனவும் உத்தியோகப்பற்றற்ற தகவல்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலில் 4 கடற்படையினர் காயமடைந்தனர் என்று கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

### அம்புலன்ஸ்கள் அடிக்கடி பறந்தன

கடற்படைத்தளத்திற்கு சமீபமாக வுள்ள வைத்தியசாலை நோக்கி அம்பு லன்ஸ்கள் அடிக்கடி பறந்தன என்று கிராம வாசிகள் தெரிவித்தனர். குண்டுகள் வீழந்த தும் கடற்படைத் துறைமுகப்பகுதி பெரும் சத்தத்துடன் அதிர்ந்ததாகவும் அவர்கள் கூறினர்.

அதனைத் தொடர்ந்து துறைமுகத்திலிருந்தும், அருகிலுள்ள காவலரண்களிலிருந்தும் வானத்தை நோக்கி சுமார் 10 நிமி டங்கள் வரை தொடர்ச்சியாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

குண்டுச்சத்தங்களைக் கேட்டு பீதியடைந்த மக்கள் என்னவோ ஏதோவென்று அச்சத்துடன் வீடுகளை விட்டு வெளியில் வந்து நிலைமையை அவதானித்தனர். சம்பவத்தைத்தொடர்ந்து திருகோணமலைக் கான தொலைத் தொடர்புச் சேவை கள் துண்டிக்கப்பட்டன. துறைமுகத்தை அண்டிய பிரதேசங்கள் எங்கும் பதற்றம் நிலவியது.

தாக்குதல் நடத்திவிட்டு திரும்பிச் சென்ற புலிகளின் விமானங்களை துரத்திச் சென்று தாக்குவதற்கு விமானப்படையின் கிபீர் விமானங்கள் வன்னிப்பகுதி நோக்கி விரைந்தன என்றும் - எனினும் புலிகளின் விமானங்கள் பத்திர மாக அவர்களின் பகுதிக்குள் தரையிறங் கிவிட, கிபீர் விமானங்கள் குடியிருப்புகள் மீது தாக்குதல் நடத்திவிட்டு தளம் திரும் பின என்றும் வவுனியா தகவல்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் விமானங்கள் கடற்பக்கமாக இருந்து தாழப்பறந்து வந்து மேற்கொண்ட தாக்குதலைத் தொடர்ந்து திருகோணமலை கடற்படை தலைமையகம் மற்றும் சீனன்குடா வான்படைத்தளம் ஆகியவற்றிலிருந்து வானூர்தி எதிர்ப்பு ஏவுகணைகளால் தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும் அவை சேதமின்றிப் பாதுகாப்பாகத் திரும்பின.

தாக்குதல் இடம்பெற்ற நேரம் இருள் கவிழ்ந்து கிடந்ததால் விடுதலைப் புலிகளும் இலக்கை சரியாக தாக்கவில்லை. படையினரும் புலிகளின் வானூர்தியை தாக்கமுடியாமல் போய்விட்டது என்று பாதுகாப்புத்துறை அவதானிகள் தெரிவித்தனர்.

தரையிலிருந்து கடுமையான விமான எதிர்ப்புத் தாக்குதல் நடத்தப்பட்ட போதிலும் விடுதலைப் புலிகளின் விமானங்கள் சாதுரியமாகத் தப்பிவிட்டன என்று படை அதிகாரிகள் ஏ.எவ்.பி. வெளிநாட்டுச் செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகளின் விமானங் களை விமானப் படையினரின் விமானங் கள் கலைத்துச் சென்ற போதிலும் அவை தப்பிவிட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்தன. (அ-1-சி)


கற்சுமி வெளியீடு
தரம் 1,2,3,4,5 மற்றும் 9,11
மாணவர்களுக்குரிய
ஆகஸ்ட் மாத இதழ்கள்
அம்மா அன்னை தாய் அறிவு
தேடல் Talent Target
வெளிவந்துவிட்டன.
'உங்கள் பிள்ளையின் ஆற்றலை மேம்படுத்தும்'

2008 A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான பயிற்சி நெறிகள் ஆரம்பம்

3000/= உடன் இரண்டு பயிற்சி நெறிகளைப் பயில்வதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

| | |
|---|---|
| Dip. In MS Office | 4 Months |
| Dip. In Desktop Publishing | 4 Months |
| Dip. In Internet e-mail | 2 Months |
| Dip. In Hardware Engineering | 4 Months |
| Dip. In Computer Programming | 6 Months |
| Dip. In Eng. Drawing & Auto CAD | 3 Months |
| Dip. In Computerized Accounting | 4 Months |
| Dip. In Data Base Management System | 4 Months |
| Dip. In Audio & Video Editing | 4 Months |
| Dip. In Visual Basic | 2 Months |
| Dip. In Web Designing | 4 Months |

Batch I 06.09.2008 Batch II 10.09.2008
Batch III 14.09.2008 Batch IV 19.06.2008
ONLINE CLASSESக்கும் மாணவர் அனுமதிக்கப்படுவர்
Softview Computer College
55, Arasady Rd, Jaffna. T.P: 021 2225170

யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
The Jaffna Education Centre
(நாதன்ஸ் சினிமா முன்பாக மேல்மாடியில்)
Spoken English With Grammar
சிங்களம்
Short hand, Typing ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.
புதிய பிரிவு ஆரம்பம்: 01.09.2008
"வெளி நாடு செல்பவர்களுக்கு இலகுவான முறையில் எழுத, வாசிக்க, கதைக்க கற்றுக் கொடுக்கப்படும்.
பாடமுடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
நிர்வாகி:- இ.லோகநாயகி

ESPECIALLY DESIGNED COURSE FOR KIDS
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேட கணினிப்பயிற்சி நெறிகள்
Level 1 to 4
புதிய பிரிவுகள் ஆரம்பம்
4ஆம் பிரிவு 27/08 at 9.00 a.m.
5ஆம் பிரிவு 31/08 at 11.00 a.m.
பதிவுகளை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்
DMI COMPUTER EDUCATION

கணிதம்
Group Classes
தரம் 6 - O/L
★ அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்
★ ஒவ்வொரு பிரிவிலும் 10 மாணவர்கள் மட்டும்
★ ஒவ்வொரு அலகு முடிவிலும் பரீட்சை
O/L மாணவர்கட்கு
கடந்த கால வினாக்களுடன் கூடிய அலகு ரீதியான மீட்டல் திங்கள் முதல் வெள்ளி வரை (5நாள்கள்)
பிரிவு I - 6.00 a.m
பிரிவு II - 6.00 p.m
தொடர்புகட்கு
Y.மகேந்திரன்
மலர்மகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

IDM After A/L
இலங்கை அரசினாலும், சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட கணனிக்கல்லூரி
இலவச கணனிக் கருத்தரங்கு
A/L மாணவர்களுக்கான விசேட இலவச கணனிக் கருத்தரங்கு 30-08-2008 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ் நாவலர் மண்டபத்தில் நடைபெறும். அனைவரும் பங்கு பற்றி பயன் பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்
021 222 9901
216 நாவலர் வீதி யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org